# மார்ட்டினுக்கு கல்தா!

விலை சதம்: 25.    தொலைபேசி: 23411

சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, ஆடி 6 உ(22-7-71) வியாழன் ஐ. அவ்வல் பிறை 28 புத்தகம் 25 இதழ் 35

## பொதுக்குழு முடிவுக்கு யாழ் மக்கள் வரவேற்பு!

கட்சிக் கட்டுப் பாட்டை மீறி அரசியல் நிர்ணய சபையில் கலந்துகொண்டு தமிழினத்துக்கு துரோகம் இழைத்த யாழ். பா. உ. திரு. சி. எக்ஸ். மாட்டினை கட்சியின் பொருளாளர் பதவியிலிருந்தும், சாதாரண உறுப்பினர் பதவியிலிருந்தும் வெளியேற்றுவது என்று தமிழரசுப் பொதுச்சபை செய்த முடிவை, கட்சி அலுவலகத்தின் முன்னால் இரண்டு நின்ற நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

இம்மாதம் 15ந் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிப் பணி மனையில் கூடிய கட்சியின் பொதுச் சபை கட்சிக்கட்டுப் பாட்டை மீறிய யாழ். பா. உ. திரு. சி. எக்ஸ் மாட்டினை கட்சியிலிருந்து வெளியேற்றியதுடன், கட்சி செல்வாக்கினால் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும், அரசியலமைப்பு வழிகாட்டுக்குழுவின் உறுப்பினர் பதவியையும் திரு. மாட்டின் துறக்கவேண்டுமென்றும் கோரியிருக்கிறது.

(2-ம் பக்கம் பார்க்க)

## ● சிறிமா - சாத்திரி ஒப்பந்தம்

# மனித உரிமை பிரச்சினையா? மாடு ஆடு வியாபாரமா?

## இலங்கை கம்யூனிஸ்டுகள் ஆதரவு! இந்திய கம்யூனிஸ்டுகள் கடும் எதிர்ப்பு!

## ஒரு நூற்றாண்டுக்குமேல் உழைத்தவர்களை இந்தியாவுக்கு நாடு கடத்துவது எந்த நீதி?

## கல்யாணசுந்தரம் எம்.பி. கடும் கண்டனம்!

இந்நாட்டுக்காக தலைமுறை தலைமுறையாக உழைத்து, தங்கள் வியர்வையையும் இரத்தத்தையும் இந்நாட்டின்வளத்துக்காக சிந்திய மலைநாட்டுத் தமிழர் இந்நாட்டிலிருந்து நாடு கடத்தவேண்டுமென்பதில் இலங்கை அரசாங்கமும் அதன் ஓர் முக்கிய உறுப்பாக விருக்கும் மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியும் மிகவும் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றன.

ஆனால் இந்தியாவிலுள்ள மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரும் டெல்லிப்பாராளுமன்ற உறுப்பினருமான திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரபூர்வ ஏடான ஜனசக்தி இதழில் எழுதியுள்ள கட்டுரையொன்றில் சிறிமா சாத்திரி ஒப்பந்தத்தை கடுமையாக சாடியிருக்கிறார்.

ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் மக்களுடைய

(2ம் பக்கம் பார்க்க)

## மாட்டின் அவர்களே! மனச்சாட்சி பற்றிப் பேச நீர் யார்?

"அன்புயர் ஐயா, அம்மா,

"ஈழத் தமிழ்பேசுமினத்தின் இருள் சூழ்ந்த நிலையை காணும் உள்ளமுள்ள யாவரும் வேதனையடைந்து வருவதை நான் கூறவேண்டியதில்லை. மொழியுரிமை, நாட்டுரிமை, குடியுரிமை, இனவுரிமை முதலிய யாவற்றையும் இழந்து கொடுமை மிகு ஆட்சியில் உள்ள நாம் விடிவை நோக்கிச் செல்லப் போராட்ட பாதையை அமைத்துப் போராடும் ஒரே ஒரு கட்சி தமிழரசுக்கட்சி யென்பதை யாருமே ஒப்புவர்; அக்கட்சியின் வெற்றியே எதிர்காலத் தமிழ் பேசுமினத்தின் விடிவுக்கு வழிகாட்டியாகும்.

"எனவே யாழ்ப்பாண மக்கள் அனைவரும் தங்கள் விலை மதிப்பற்ற வாக்கை தமிழரசுக் கட்சிக்கு கொடுத்து தமிழரசுக் கட்சிக்கு இன்னுமொரு தொண்டனை கொடுக்குமாறு பணிவன்புடன் கோருகிறேன்."

தங்கள் ஊழியன்
சி. சே. மாட்டின்.

★ பொதுத் தேர்தலின் போது திரு. மாட்டின் வெளியிட்ட துண்டுப் பிரசுரமொன்று இது.

## வெங்கல சாசனத்தில் தமிழரசார் கையொப்பம் இருக்காது!

புதிய அரசியல் அமைப்பு சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகித்திடும் சகல உறுப்பினர்களின் கையெழுத்தைக்கொண்ட வெங்கலத் தகடு ஒன்று தயாரித்து புதைபொருள் இணைக்களத்தில் எதிர்கால சந்ததியினருக்காக வைக்கப்போவதாக அரசியலமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்வா அறிவித்திருக்கிறாரல்லவா?

தமிழினத்தை மீளா அடிமைப் படுகுழியில் தள்ளும் இந்த அடிமைச் சாசனத்தில் தமிழினத்தின்

(2-ம் பக்கம் பார்க்க)

"எங்கள் கட்சிக்கு நீங்கள் தீங்கு விளைவிக்கும் போது தமிழ் மக்களின் நலனுக்கே தீங்கு விளைவிக்கிறீர்கள். கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக நீங்கள் செயற்படுவது மனச்சாட்சியுடன் சம்பந்தப்பட்ட ஒரு விஷயமல்ல. உங்களுக்குமுன் ஒத்துழைப்பு பல்லவிபாடிய பலர் தமிழுரிமைப் போராட்டத்தைப் பலவீனப் படுத்தினர். அப்படிப்பட்டவர்கள், எல்லாம் மக்களால் நிராகரிக்கப்பட்டுவிட்டனர். நீங்கள் அந்த வரிசையில் கடைசியாக இடம் பெறப்போகிறீர்கள்."

## மார்ட்டினுக்கு தமிழரசுத் தந்தை பதில்!



— யாழ் பா. உ. திரு சி. எக்ஸ். மாட்டின் அவர்களுக்கு தமிழரசுத்தந்தை அவர்கள் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழரசுத்தந்தை எழுதியுள்ள கடிதம் முழுவதும் வருமாறு:—

'எனது அன்புள்ள மார்ட்டின்,

இம்மாதம் 9-ம் திகதி எனக்கு அனுப்பிவைத்த கடிதத்திற்காக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்: நீங்கள் எமது கட்சிக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் வேற்றுமை இருப்பதாகக் கருதுகிறீர்கள் என்பதை உணரக் கூடியதாக இருக்கிறது. தமிழ் மக்களின் கட்டுக் கோப்பையே நான் கட்சியின் கட்டுக்கோப்பு என்ற பதத்தின்மூலம்விளக்கினேன் எமது கட்சிக்குத் தீங்கு செய்யும்போது தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கும் இலட்சியங்களுக்கும் தீங்கிழைக்கிறீர்கள்.

(2-ம் பக்கம் பார்க்க)

## மாட்டினை வெளியேற்றுவதை செல்லத்தம்பு எதிர்க்கவில்லை

'யாழ் பா. உ. திரு. சி. எக்ஸ். மாட்டினை கட்சியிலிருந்து வெளியேற்றுவது என்ற தீர்மானத்தை நான் எதிர்த்து வாக்களிக்கவில்லை. கட்சித்தீர்மானத்துக்கு நான் என்றும் கட்டுப்பட்டு நடப்பவன். கட்சியை அழித்திட முயலும் சக்திகளுக்கு நான் ஒருபோதும் இரையாக மாட்டேன்.'

—இவ்வாறு வவுனியா பா. உ. திரு. செல்லத்தம்பு சுதந்திரன் நிருபரிடம் கூறினார். 20—7—71 தினபதி செய்தி பற்றி அவர் மேலும் கூறியதாவது:—

'மாட்டினை வெளியேற்றும் தீர்மானத்தில் நான் நடுநிலைமை வகித்தேன் என்பதை வெளிப்படுத்தியதற்கு காரணம், தமிழரசுக்கட்சி எவ்வளவு தூரம் சனநாயக ரீதியில் இயங்குகிறது என்பதை எடுத்துக் காட்டத்தான். ஆனால் இதை வைத்துக்கொண்டு

(2ம் பக்கம் பார்க்க)

## கட்சி நலன் வேறு; இன நலன் வேறு? — அரசியல் மடல்: உள்ளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

## எண்ணம்

# கட்சியும் கட்டுப்பாடும்

எந்த ஒரு சமுதாயமும் வெற்றிப்பாதையில் முன்னேறுவதற்கு பின்பற்றிட வேண்டிய பல்வேறு கொள்கைகளில் கட்டுப்பாடு என்பது மிகவும் இன்றியமையாத — அதி முக்கியமான கொள்கையாக இருந்திடவேண்டும்.

கட்டுப்பாடற்ற எந்த மக்களும் வாழ்வில் முன்னேற்றம் காணமுடியாது. கட்டுப்பாடற்ற சமூகம் காலகதியில் அழிந்தொழிந்து போவதையும் யாரும் தடுத்து நிறுத்திடவும் முடியாது.

அதுவும் விடுதலை இழந்து—உரிமைகளைப் பறிகொடுத்து அழிவின் விளிம்பில் நின்றுகொண்டிருக்கும் ஒரு இனம், கட்டுப்பாட்டினையும் காற்றில் பறக்கவிட்டதென்றால், அந்த இனத்தை அழிவிலிருந்து மீட்பதென்பது ஒருபோதுமே நடவாத காரியமாகிவிடும்.

சுதந்திரத்தை இழந்து — உரிமைகளைப் பறிகொடுத்து — அடிமைப் படுகுழியில் தள்ளப்பட்டுக்கிடக்கும் ஈழத்தமிழினத்துக்கு மீண்டும் நல்வாழ்வு பெற்றிட போராடுவதற்காக தோன்றிய இயக்கமே இலங்கைத் தமிழரசுக்கட்சியாகும்.

இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கும் இந்நாட்டிலுள் ஏனைய அரசியற் கட்சிகளுக்கும் அடிப்படையில் ஓர் பெரும்வேறுபாடுண்டு. ஏனைய அரசியற் கட்சிகள், அரசியலை ஓர் பொழுதுபோக்காகவும், அதிகாரத்தைக் கைப்பற்றும் கருவியாகவுமே பயன்படுத்துகின்றன. ஆனால் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை அரசியலை பொழுதுபோக்காக கருதுவதற்கு இஞ்சித்தேனும் இடமில்லை. ஒரு சமுதாயத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கவேண்டிய பாரிய பொறுப்பு-ஒரு இனத்தின் விடுதலையைப் பெற்றுக் கொடுக்கவேண்டிய மாபெரும் சுமை — அதற்கு வழிகாட்டவேண்டிய கடமை தமிழரசுக் கட்சிக்கு இருக்கிறது.

ஆம், தமிழரசுக்கட்சி வெறும் பாராளுமன்ற அரசியற்கட்சி மட்டும் அல்ல; ஆடு நாற்காலி அரசியல் வாதிகளின்புகலிடமுமல்ல. அது இந்நாட்டுத்தமிழினத்தின் ஏகபோக விடுதலை இயக்கம். யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஈழத்தமிழினத்தின் வாழ்வும் தாழ்வும் தமிழரசுக்கட்சியுடனேயே பின்னிப்பிணைந்து கிடக்கின்றன என்ற உண்மையை யாரும் மறுத்திடமுடியாது.

இத்தகைய பொறுப்புக்களை தாங்கியுள்ள தமிழரசுக் கட்சியில் கட்டுப்பாடு என்பது எவ்வளவு உறுதியாக பின்பற்றிடவேண்டியதொன்று என்பதை நாம் இங்கு சுட்டிக் காட்டிடத் தேவையில்லை. இராணுவத்திலுள்ளது போன்ற கட்டுப்பாடு ஒரு விடுதலை இயக்கத்தினருக்கும் இருந்திடவேண்டியது அவசியமாகும்.

தமிழ் மொழியுரிமைகளை புதிய அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற தமிழினத்தின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதையடுத்து பெரும்பான்மையான தமிழ்மக்களுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கும் தமிழரசுக்கட்சி அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளிநடப்பு செய்து அதைப்பகிஷ்கரித்து வருகிறது. இந்த அதி முக்கிய பிரச்சினையில் — தமிழினத்தின் கௌரவத்தைக்காத்திட வேண்டிய பிரச்சினையில் — தமிழரசுக்கட்சியுடன் சேர்ந்து செயல்பட மறுத்து கட்டுப்பாட்டை மீறி அரசியல் நிர்ணய சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு வருகிறார் யாழ். பா. உ. திரு. சி. எக்ஸ். மாட்டின்.

கட்டுப்பாட்டுக்கு அமைந்து நடக்காத மாட்டினை கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில்கூடிய தமிழரசுப் பொதுச் சபை, கட்சியிலிருந்து வெளியேற்றியிருக்கிறது. பொதுச் சபையின் இந்த கண்டிப்பான போக்கினை — களைபிடுங்கும் நடவடிக்கையை பாராட்டுகிறோம்.

ஒரு விடுதலை இயக்கத்துக்குத் தேவையானவர்கள், கட்டுப்பாட்டை மீறி நடக்கும் தான் தோன்றிகள் அல்ல. கட்டுப்பாட்டுக்கு அமைந்து நடக்கும் செயல் வீரர்களே!

தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரை. அவர்கள் யாராயிருந்தாலும் கட்சி செல்வாக்கினால் பா. உ. பதவியைப் பிடித்தவர்களே தவிர தனிப்பட்ட செல்வாக்கினால் அல்ல. தமிழரசுக்கட்சியின் கட்டுப்பாட்டை மீறி நடந்து கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் பலர் கடந்த காலங்களில் கட்சியுடன் போட்டியிட்டு பொதுத் தேர்தல்களில் மண் கவ்வியிருப்பது ஒன்றே கட்சிக்கு தமிழ் மக்களிடையே எத்துணை செல்வாக்கு உண்டென்பதை நிலை நாட்டுகிறது.

தமிழரசுக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு, கட்சிச் செல்வாக்கினால் பெற்ற பா. உ. பதவியையும் ராஜினாமா செய்யும்படி கட்சிப் பொதுச்சபை திரு. மாட்டினிடம் கோரியிருக்கிறது. அவ்வளவு தூரம் திரு. மாட்டினிடம் அரசியல் நேர்மையையும் கண்ணியத்தையும் மனச்சாட்சியையும் நாம் எதிர்பார்த்திடுவது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகவே முடியும்.

ஆனால் ஒன்று மட்டும் கூறுகிறோம்—ஒத்துழைப்பு பல்லவி பாடி தமிழினத்தின் முதுகில் குத்த ஆரம்பித்துள்ள திரு. மாட்டினை தமிழ் மக்கள் இனி முற்றாக நிராகரித்து விடும் காலம் அதிக தூரத்திலில்லை!

இந்நேரத்தில் சென்னையில் நடைபெற்ற நாவலர் நெடுஞ்செழியன் பிறந்த நாள் விழாவில் பேசிய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தெரிவித்த அருமையான கருத்தொன்றை தமிழரசுக்கட்சியினருக்கும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

"எந்த ஒரு மனிதன் கழகத்திற்கு தன்னால் என்ன இலாபம் வரும் என்று எண்ணிப் பணிபுரிகிறானோ—அவனால் கழகமும் வளரும்; அவனும் வளர்வான். கழகத்தால் தனக்கென்ன இலாபம் என்று கருதினால் அவனும் வீழ்வான்; அவனைப் போன்றவர்கள் பெருகினால் கழகமும் வீழும்"

என்று கலைஞர் மு. க. கூறியிருப்பது தி. மு. கழகத்திற்கு மட்டுமல்ல—எந்தக் கட்சிக்குமே பொருந்தும்.

ஆம், தமிழரசுக்கட்சியினருக்கு,—பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் இதையே நாமும் கூறுகிறோம்.

எந்த ஒரு மனிதன் தமிழரசுக்கட்சிக்கு தன்னால் என்ன இலாபம் வரும் என்று எண்ணிப்பணிபுரிகிறானோ அவனால் கட்சியும் வளரும்; அவனும் வளர்வான். கட்சியால் தனக்கென்ன இலாபம் என்று கருதினால், அவனும் வீழ்வான்; அவனைப் போன்றவர்கள் பெருகினால் கட்சியும் வீழும்.

இரண்டாவது வகையினர் கட்சிக்குள் பெருகிவிடாமல் காலத்துக்காலம் 'களை' பிடுங்க வேண்டியது தமிழரசுக்கட்சியின் அதிமுக்கிய கடமை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

---

### மார்ட்டினுக்கு கல்தா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டின் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட செய்தி அறிந்ததும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கட்சி முடிவை மக்கள் வரவேற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

"தந்தை செல்வா கீறிய கோட்டை தாண்டும் எவரும் அவர் எவ்வளவு பெரியவராக இருந்தாலும் எங்கள் கால் தூசுக்கு சமம்" என்று உணர்ச்சி கொண்ட வாலிபர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் குறிப்பிட்டார்"

### வெங்கல சாசனத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதித்துவ ஸ்தாபனமான தமிழரசுக் கட்சி பா. உ. க்கள் பன்னிருவரும் கையொப்பமிட மாட்டார்கள். ஈழத் தமிழகத்தின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதும் இவர்கள் இப்போது அ. நி. சபையை பகிஷ்கரித்து வருவதும் தெரிந்ததே.

### மனித உரிமை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சம்மதத்துக்கு இடமளிக்காமலே ஆடுமாடு வியாபாரம் போன்று ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதென்றும் இது இரண்டு நாடுகளின் நலன்களுக்குமேஏற்றதல்ல என்றும் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே இந்த ஒப்பந்தம் மேலும் சிக்கலை வளர்க்குமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

### மாட்டின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிக்குள் பிளவு என்று யாரும் தப்புக்கணக்கு போடவேண்டாம்.

'பலவித கருத்துக்களையும் கட்சிப் பொதுச் சபையில் வெளியிட கட்சி உறுப்பினர்களுக்கு உரிமையுண்டு. இதுவே சனநாயகம். ஆனால் கட்சி ஒரு முடிவுக்கு வந்தபின் அதற்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டியதே மிகவும் முக்கியம். இதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

### மார்ட்டினுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனென்றால் எமது கட்சி தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காகவே இயங்கி வருகிறது. தமிழ் மக்களின் நலவுரிமைகளைக் கருத்திற் கொண்டே எமது கட்சி அரசியல் அமைப்புச் சபையைப் பகிஷ்கரிக்கும் முடிவையெடுத்தது.

அரசியலமைப்புச் சபையின் அடிப்படைத் தீர்மானங்கள் அரசியல் திட்டத்தில் சிங்களத்திற்கு உயர்ந்த ஸ்தானத்தை வழங்கியிருக்கிறது. 23வது அடிப்படைத் தீர்மானம் சிங்களத்தை நாடெங்கிலும் நீதிமன்ற மொழியாகப் பிரகடனம் செய்கின்றது. இதற்கு ஒரு சமரசத் தீர்வுகாணும் நோக்கத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் நீதிமன்ற மொழியாக இருக்கவேண்டுமென்பதை அரசியல் திட்டத்தில்குறிப்பிட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தினோம்.

எனினும் திருத்தப்பட்ட அத் தீர்மானம் வருமாறு:-

"தேசியசபை வேறெந்த மொழியிலும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வழக்கு விசாரணைகளை நடத்த இடமளிக்கலாம்."

இந்த அடிப்படைத் தீர்மானத்தில் தமிழ் மொழி பற்றி பிரஸ்தாபிக்கப்படவில்லை. அரசியல் அமைப்புச் சபையின் உறுப்பினர்களையே உறுப்பினர்களாகக் கொள்ளவிருக்கும் தேசியசபை தமிழ்மொழியை வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நீதிமன்றமொழியாக அங்கீகரிக்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லையே...

மேற்படி தீர்மானத்தில் "வேறு எந்த மொழியிலும்" என்ற பதத்தைப் புகுத்தி இருப்பதன்மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நீதிமன்ற மொழியாக ஆங்கிலத்தை வைத்திருப்பதற்கு தேசியசபைக்கு இடமளிப்பதாக இருக்கின்றது. அதனால் தான் இவ்விரு மாகாணங்களில் நீதிமன்ற மொழியாக தமிழே இருக்கவேண்டும் என்பதை அரசியல் திட்டத்திலேயேகுறிப்பிடவேண்டுமென்று நாம் விரும்பினோம். நாம் கேட்டதற்கும், அடிப்படைத் தீர்மானங்களில் அவர்கள் அளித்ததற்கும் வேற்றுமையே இருக்கிறது.

அடிப்படைக் கருத்துக்களிலேயே இந்த வேற்றுமை காணப்படுகிறது.

நாடெங்கிலும்சிங்களம்நீதிமன்ற மொழியாக இருக்க வேண்டுமென்பது அரசியல் திட்டத்திலேயே உத்தரவாதம் அளிக்கப்படுகிறது அதேவேளையில், தேசிய சபை விரும்பினால் மட்டுமே தமிழ் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றமொழியாக இருக்கும். அப்படி ஒரு தேசிய சபை தமிழுக்கு இந்த அந்தஸ்தை வழங்கினாலும் இன்னுமொரு தேசியசபை அதனை ரத்துச்செய்வதற்கு இடமிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிருவாக மொழியாகவும் நீதிமன்றமொழியாகவும் தமிழ் இருக்க வேண்டுமென்பதை அரசியல் திட்டத்தில் புகுத்த வேண்டுமென்று நாம் பதின்மூன்று பேரும் வலியுறுத்தினோம். ஆனால் எங்களில் ஒருவர் அதாவது நீங்கள் அரசியலமைப்புச் சபையில் பிரதிநிதித்துவம் வகிக்காவிட்டால் தமிழ்மொழிக்கு ஈடுசெய்ய முடியாத தீங்கு செய்யப்படலாமெனக் கூறுகிறீர்கள். எமது திருத்தத்தின் மீது வாக்கெடுப்பு நடந்த பின்னரே தமிழ் மொழிக்கு ஈடுசெய்ய முடியாத அளவு அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது என்பதை நீங்கள் உணரவேண்டும். அதனால் இனிமேலும் அரசியலமைப்புச் சபையில் கலந்து கொள்வதில் எவ்வித நன்மையும் இல்லை என்பதை உணர்ந்து நாம் வெளியேறினோம். தமிழுக்குச் செய்யப்பட்ட இந்த அநீதிக்கு நாங்கள் காட்டக்கூடிய ஆகக் குறைந்தபட்ச எதிர்ப்பு அரசியல்நிர்ணயசபையைவிட்டு வெளியேறுவதாகவே இருந்தது. அந்த எதிர்ப்பு நடவடிக்கையில் நீங்களும் எங்களுடன் சேர்ந்திருக்கவேண்டும். 'ஈடு செய்யமுடியாத நஷ்டத்தை தவிர்க்கும்" என்ற நம்பிக்கைக்கு எதிரான நம்பிக்கையுடன் நீங்கள் அங்கு இருந்திருக்கலாகாது.

சிலர் நாம் அரசியலமைப்புச் சபையில் இருந்து வெளியேறுவதை எதிர்த்த போதிலும். இறுதியில் நாம் போதியளவு நியாயங்களை எடுத்துக் காட்டிய பின்னர் அவர்கள் இம்முடிவை ஆதரித்தார்கள். அவர்கள் அனைவரும் மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டே இம்முடிவை எடுத்தார்கள். ஆனால் நீங்கள் மனச்சாட்சி என்ற போர்வையில் கருத்து வேற்றுமையை கிளப்பப் பார்க்கிறீர்கள். கட்சித் தீர்மானத்திற்கு எதிராக நடப்பது என்று நீங்கள் எடுத்த முடிவு மனச்சாட்சிக்கு அடிபணிந்து நடக்கும் ஒரு செயல் எனக் கூறுவதற்கில்லை.

நீங்கள் ஒத்துழைப்புபற்றி பேசுவதற்கு முன்னரே அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு அளிக்கிறோம் என்று கூறிய தமிழ் தலைவர்கள் உண்மையில் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை பலவீனப் படுத்திவிட்டார்கள். மக்கள் அவர்களை ஒதுக்கிவிட்டார்கள். உங்களின் நடத்தையும் இப்படிப்பட்டவர்களின் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப் படவேண்டிய ஒன்றாகும்.

எங்களுக்கு இடையில் நடந்த கடிதத் தொடர்பை நீங்கள் பத்திரிகைகளுக்கு வெளியிட்டமையினால் நானும் இதனை பத்திரிகைகளுக்கு வெளியிடுகிறேன்.

அன்புள்ள

எஸ். ஜே. வி. செல்வநாயகம்

---

"நானே செய்துகொள்ளக் கூடிய காரியம் எதையும் நான் மற்ற எவரையும் செய்யச் சொல்லக் கூடாது என்று எப்பொழுதும் நம்பி வருகிறேன்."

—மாண்டெஸ்கியூ.

காலம் பெறுமதியானது. மில்க்வைற் சலவைப்பவுடர் நைலோன், டெர்லின் டெக்ரோன் ஆகிய துணிகளை சில நிமிடங்களில் பிரகாசமாக சலவை செய்கிறது. பாவித்த மேலுறைகளை சேகரித்து அனுப்பி மிக உயரிய பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ட்டினுக்கு மனச்சாட்சியிருந்தால்.........(2)

அன்பு நண்பா,

உள்ளம் உலைக்கூடம் போல கொதித்திட, உணர்ச்சி வெள்ளம் அலை புரண்டிட, வெய் துயிர்ப்பும் வேதனையும் தவிப்பும் முகத்தில் தேக்கியபடி முடிவு என்ன என்பதனை அறிந் திடும் ஆவலுடன துடிப்புமிக்க தமிழ் இளைஞர் கள் பல நூற்றுக்கணகானோர் திரண்டு நின்ற னர்—சென்ற கிழமை யாழ்ப்பாணம் கட்சிப் பணிமனையில் மாட்டின் விவகாரம் பற்றி ஆராய்ந்து முடிவெடுத்திடுவதற்காக நமது பொதுச்சபை கூடிய நேரத்தில்!

ஆம் நண்பா, அந்த மக்களின் முகத்திலே தான் எவ்வளவு வெறுப்பும் ஆத்திரமும் குமைந்துகொண்டிருந்தன மாட்டினின் துரோ கப் போக்கினைக்கண்டு! மாட்டினின் வெற்றிக் காக வியர்வை சிந்த உழைத்தவர்கள் அவர் கள்; யாழ்தொகுதியின் தன்மானத் தமிழர்கள் அவர்கள்; கட்சிக்கும் இனத்துக்கும் துரோகம் புரிந்து காட்டிக்கொடுத்திட்ட மாட்டினை கட்சியிலிருந்து வெளியேற்றிடுவது என்று நாம் எடுத்த முடிவினை அவர்களிடம தெரிவித்த போது, அதை எவ்வளவு மகிழ்ச்சி ஆரவாரத் துடன் அவர்கள் வரவேற்றனர் என்பதை மாட்டின் அன்றே பார்த்திருக்க வேண்டும்! அங்கு திரண்டு நின்ற யாழ்ப்பாணத் தொகுதி வாக்காளர்களில் ஒருவராவது கட்சி எடுத்த முடிவு தவருனது என்று கூறியிருக்க வேண் டுமே! அதுதான் இல்லை!

நமது கட்சியிலிருந்திட்ட காலை, பத்திரி கைகளுக்கு கட்சி எதுவித அறிக்கைகளும் கொடுத்திடுதல் ஆகாது; பத்திரிகைகளால் தான் நமது பிரச்சினைகள் நாசமாகின்றன என்றெல்லாம் கூறி, பத்திரிகைகளுக்கு அஞ் சிய மாட்டின், இன்று ஓடோடிச் சென்று 'அந்தரங்கம்' என்று தாமே கருதிய கடிதங் களையே பத்திரிகைகளுக்கு கையளித்து 'பப்ளி சிட்டி' தேடுவதில் முனைந்து ஈடுபட்டிருக்கிறார் என்றால் அவர் எந்த நிலைக்கு இப்பொழுது இறங்கி விட்டார் என்பதைத்தான் பாரேன்!

தமக்கு வாக்களித்தவர்களில் பெரும் பாலோர் தமது துரோக நடவடிக்கையை ஏற்றிடுகின்றனர்; பொதுச்சபை உறுப்பினர் நால்வர் ஆதரித்தனர்; அவர் ஏற்கின்றார்;

## அரசியல் மேடை

இவர் ஏற்கின்றார் என்றெல்லாம் கொழும்பிலி ருந்து கொண்டு பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதால் தமிழ் மக்களை—குறிப்பாக யாழ் தொகுதி மக்களை — ஏமாற்றிடலாமென்று மாட்டின் கருதினாரென்றால், அவர் தப்புக் கணக்குப் போடுகிறாரென்றே கூறிட வேண்டும்.

ஏனெனில் தமிழ் மக்கள், இந்நாட்டில் வெளிவரும் புதினப்பத்திரிகைகளை வைத்துக் கொண்டு தமது அரசியல் கருத்துக்களை—அர சியல் பாதையை—வகுத்துக் கொள்பவர்களல் லர். இந்நாட்டுப்பத்திரிகைகள் தமிழினத்தின் தனித்துவத்தை அழித்தொழித்து சிங்கள ஏகாதிபத்தியத்தை இங்கு உருவாக்குவதற்கே பயன்படுத்தப்படுகின்றன என்ற உண்மை தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்!

தமிழரசுக்கட்சியை ஒழித்துக்கட்டுவதன் மூலம் தமிழினத்தை பலவீனப்படுத்துவதே பத்திரிகைகளது முதல் திட்டம். இந்த நோக் கத்தை நிறைவேற்றிடுவதற்கு சிறு துரும்பு கிடைத்திடினும் அதை அவை பயன்படுத்திக் கொள்ளத் தவறமாட்டா. இப்போது தமிழர சுக்கட்சிக்கு எதிராகப் பயன்படுத்திட, பத்திரி கைகளுக்கு கிடைத்திட்ட கருவியே மாட்டின் என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்!

எனவே தமது அறிக்கைகளை பத்திரிகைகள் சிலவற்றில் நீலம் சிவப்பு மைகளில் கொட்டை யெழுத்துக்களில் பிரசுரிக்க வைத்துவிடுவதால் தமிழ் மக்களின் உறுதியான அரசியல் நிலையை —தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தையே தங் கள் முடிவாககொள்ளும் கட்டுப்பாடான போக் கினை-மாற்றிவிடலாம் என்று மாட்டின் அவர் கள் கனவுகண்டு விடவேண்டாம்!

நண்பா, மாட்டின் அவர்கள் தமது துரோ கத்தை மறைத்திட ஒரு புதிய பல்லவியைப் பாட ஆரம்பித்திருப்பதையும் அப் பல்லவிக்கு ஆதரவாக இந்நாட்டுப் பத்திரிகைகள் தாளம் போட ஆரம்பித்துள்ளதையும் கவனித்திருப் பாய்! அதுதான் கட்சி நலன் வேறு; சமூக நலன் வேறு; என்றமாயாவாதமாகும்!

அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரித்திடு வது என்று தமிழரசுக்கட்சி மேற்கொண்ட முடிவு கட்சி நல னுக்காகவாம்; மாட்டின் அவர்கள் கட்சி முடிவை மீறி அரசியல் நிர் ணய சபைக்கூட்டங்களில் கலந்து கொண்டிருப் பது தமிழ் சமூகத்தின் நலன் கருதியாம்! இது

தான், மாட்டினும், பத்திரிகைகளும் நடத்தும் பிரச்சாரம்!

கட்சி என்பது எங்கோ ஆகாயத்திலிருந்து இறங்கிவந்துள்ளது போலவும், சமூகம் என் பது கட்சியிலிருந்து வேறுபட்டு புறம்பாக இயங்குவது போலவும் ஒரு படம் போட்டுக் காட்டிட முனையும்இவர்களது அரசியல் அறி வீனத்தை எண்ணிடும்போது சிரித்திடத் தோன்றுகிறதல்லவா?

சமுதாயம் வேறு; கட்சி வேறல்ல, சமுதா யத்தின் நலன் கருதி சமுதாயத்திலுள்ளவர் களால் சமுதாயத்துக்காக நடத்தப்படுவதே கட்சி. யாரோ ஒரு சிலரது கருத்துக்கள் மக் கள்மீது திணிக்கப்படுவது சர்வாதிகார அமைப் பில் தான். ஆனால் சனநாயக அமைப்பில், கட்சி களும் சனநாயக ரீதியில் தான் இயங்குகின்றன: மக்கள் பிரதிநிதிகள் ஒன்று கூடிக்கலந்துபேசி

இப்படி நமது இயக்கத்தின் வரலாற்றினை எடுத்துப் பார்த்திடின் நமது கட்சியின் முடிவு ஒவ்வொன்றும், இனத்தின் நலனை யொட்டியே எடுக்கப்பட்டு வருகிறதேதவிர கட்சி நலனை யொட்டியல்ல!

இதனை, தமிழரசுக்கட்சி, கட்சி நலனைக் கவனிக்கிறது என்று இன்று குற்றம் சாட்டிடும் மாட்டின் கூட சென்ற தேர்தலின் போது தமி ழரசுக்கட்சி சார்பில் போட்டி யிட்ட நேரத் தில் தெளிவாகக் கூறியிருக்கிறார்:

We are fighting for a cause, the up liftment of the Tamil speaking people. The party to which I belong has not merely preached this as others have done but its members have endured hardshipps and sufferings for this cause. No other party can truly make this claim. We agree that the Tamil speaking people Should send one party to make an united demand, to speak with one voice."

# கட்சி நலன் வேறு

மக்களுக்கு எது நல்லது; எது தீயது என்பதை யெல்லாம் விவாதித்து முடிவு செய்யும் ஒரு அமைப்பாகவே கடசி விளங்குகிறது. எனவே ஒரு சமுதாயத்துக்காக உழைத்திடும் கட்சி எடுத்திடும் எந்த முடிவும், சமுதாய நலன் கரு தியேதவிர கடசி நலன் கருதியல்ல.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை, கட்சி நலன் வேறு; தமிழினத்தின் நலன் வேறு அல்ல; தமிழ் இனத்தின் நலன் கருதியே அல் லும் பகலும் உழைத்திடும் நமது இயக்கத்தவர் களுக்கு 'கட்சி நலன்' என்று தனியே வேறு ஒன்று இருப்பதாக நாம் கருதிடவில்லை.

1956ம் ஆண்டு தமிழ் மொழியுரிமையைப் பறித்த சிங்களம் மட்டும் சட்டம் வந்திட்ட காலை, கொழும்பு காலி முகத்திடலில் அதை ஆட்சேபித்து அறப்போரிலீடுபட்டு நமது தலை வர்களும் தொண்டர்களும் அடியும் உதையும் பட்டது கட்சி நலனுக்காகவா இனத்தின் நலனு க்காகவா? நமது பொதுச் செயலாளர் அமிர்த லிங்கத்தின்நெற்றி பிளந்ததும், சாவகச்சேரி தந்திட்ட கடமை வீரர் நவம் மூங்கில் கழியால் வயிற்றில் குத்து வாங்கியதும், அமரர்வன்னிய சிங்கம் உதை வாங்கியதும் கட்சி நலனுக்கா கவா இனத்தின் நலனுக்காகவா?

கால்கடுத்திட, கல்லும் முள்ளும் குத்திட, கானுறும் காடுகளும் தாண்டி திருமலைக்கு யாத்திரை மேற்கொண்டு ஈழத்தமிழினத்தின் விடுதலைக்குரலை நான்குதிசைகளும் எதிரொலித் திட அங்கு வைத்துப் பிரகடனப் படுத்தினே மே— அது கட்சி நலன் கருதியா இன நலன் கருதியா?

சிங்களமொழியைத்தமிழர்கள் மீது திணித் திடும் ஏதேச்சாதி காரப்போக்கினை எதிர்த்து மோட்டார் வாகனச் சட்டத்தை மீறி அன்று சிறைச்சாலைகளை நிரப்பினார்களே நமது இயக் கத்தினர்—அது கடசி நலன் கருதியா இன நலன் கருதியா?

"நாம் ஒரு இலட்சியத்துக்காக தமிழ் பேசும் மக் களின் நல் வாழ்வுக்காக போராடிவருகின்றோம்: நான் சார்ந்துள்ள கட்சி ஏனைய கட்சிகள் செய்திருப் பதைப்போல வெறும் பிரசாரத்துடன் நின்று விட வில்லை. எமது கட்சியின் உறுப்பினர்கள், கட்சியின் இலட்சியத்தை அடையும் பொருட்டு பலதரப்பட்ட கஷ்டநஷ்டங்களை சகித்து வந்திருக்கிறார்கள். உண்மை யாக வேறு எந்த ஒரு கட்சிதானும் இவ்விதம் பெருமை கொள்ள முடியாது. ஒன்றுபட்ட கோரிக் கையை விடுக்கவும் ஒரே குரலில் பேசவும், தமிழ் பேசும் மக்கள் ஒரே கட்சியை அனுப்ப வேண்டுமென் பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம்."

—இது நண்பா 2. 5. 1970ல் திரு. மாட்டின் தமது கைப்பட வெளியிட்ட தேர்தல் விஞ்ஞா பனத்தில் காணப்படுவது.

தேர்தல் சமயத்தில் மாட்டினுக்கு இனித்த 'கட்சி' என்ற சொல் தேர்தலில் வெற்றிபெற்ற பின் இன்று கசக்கிறது: இப்படிப்பட்டவர்தான் 'மனச் சாட்சி' பற்றியும் அதிகமாக அலட்டிக்கொள்ளும் வேடிக்கையையும் காண்கிறோம்.

அரசியல் நிர்ணயசபையைப் பகிஷ்கரித்திடுவது என்று கட்சி எடுத்திட்ட முடிவு கட்சி நலன் கருதி யல்ல. தமிழினத்தின் நலன் கருதி-தமிழ்மக்களின் தன் மானத்தை காத்திடும் பொருட்டே-அரசியல் நிர்ணயசபையிலிருந்து நாம் வெளியேறினோம். அரசியல் நிர்ணயசபையில் கலந்துகொள்வதன் மூலம் கட்சிக்கட்டுப்பாட்டை மீறியது மட்டுமன்றி தமிழினத்தையே திரு. மாட்டின் காட்டிக் கொடுக் கிறார்-முதுகில் குத்துகிறார் என்பதே எமது திடமான கருத்தாகும்!

மாட்டின்கூட ஏற்கெனவே ஒப்புக் கொண்டிருக்கிறபடி, தமிழினத்துக்காக அளப் பரிய தியாகங்களையும் கஷ்டங்களையும் ஏற்றுக் கொண்டிருக்கும் இலங்கை தமிழரசுக்கட்சி 'கட்சிநலனுக்காகவே' அரசியல் நிர்ணய சபை யை பகிஷ்கரித்திடுகிறது என்பதும் இந் நடவடிக்கையினால் தமிழினத்துக்கு

# இன நலன் வேறா?

தடுப்புக்காவலில் எத்தனையோ தொல்லை களைத்தாங்கிக் கொண்டு—வீடுவாசல், உற்றார் உறவினர்களைப் பிரிந்து மாதக் கணக்காக வாடினோமே—அது அது கட்சி நலன் கருதியா, இனத்துக்காகவா?

1961ம் ஆண்டு, இரு திங்களாக ஈழத்தமிழ கத்தில் மாபெரும் அறப்போராட்டத்தினை நடத்தி அன்றைய ஆட்சியாளர்களை நிலை குலைய வைத்தோமே—தனியாகத் தமிழ் பகு திக்கு அஞ்சல் நிலையம் நடத்தி அஞ்சல் சட் டத்தை மீறினோமே—இவற்றால் எத்தனையோ கொடுமைகளையெல்லாம் தாங்கிக்கொண் டோமே—இது கட்சி நலனுக்காகவா இன நல னுக்காகவா?

1965ம் ஆண்டு நமது கட்சியின் உதவி யுடன் ஓர் அரசாங்கம் நிறுவப்பட்ட நேரத் தில்—ஒன்றுக்கு மூன்று அமைச்சர் பதவிகளை டட்லி சேனநாயகா நமது கட்சிக்கு வழங்க முன்வந்த போது—தேர்ந்தெடுக்கப்பட்ட நமது கட்சி பா. உ. க்கள் அப்பதவிகளை ஏற்றிட மறுத்ததும்—கட்சியின் நிபந்தனைகளை நிறை வேற்று வதற்காக கட்சியில் எவ்வித பதவியும் வகிக்காத திருச் செல்வத்தை மட்டும் அமைச் சரவையில் நியமித்ததும்—கட்சி நலன் கரு தியா இன நலன் கருதியா?

கிடைக்கக்கூடிய நன்மைகளை கட்சி பாழாக்குகிறதென்பதும் எத்துணை அபத்த மான வாதம் என்பதுநீதிபதியாக விளங்கிய மாட்டினுக்கு புரியாமற் போனதுதான் நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

நேற்று அரசியலுக்கு வந்த தனியொரு மாட்டினுக்கு தமிழினத்தின் வாழ்வில் இருக்கும் அக்கறையை விட ஆயிரம்கோடிமடங்கு அக்கறை கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தமிழினத்துக் காகவே நாளும்பொழுதும் தன்னை அழித்துக் கொண்டு வரும் தமிழரசுத்தந்தைக்கும் அவர் பின்னால் அணிவகுத்துநிற்கும்தமிழரசுத் தொண்டர் களுக்கும் உண்டு என்பதனை இந்நாட்டு தமிழ்மக்கள் அறிந்திடுவர்.

மாட்டினுக்காக 'டெயிலிமிரர்' ஏடு வக்காலத்து வாங்கி வருவதைக் கவனித்திருப் பாய். டைம்ஸ் நிறுவனத்தின் ஒரு வெளியீடு தான் 'டெயிலிமிரர்' என்பதும் டைம்ஸ் ஸ்தாபனத்தின் நிர்வாக டைரக்டராக முன் னொருகால் இருந்தவர் திருவாளர் மாட்டின் என்ற உண்மையும் உனக்குத் தெரிந்திரு மானால், மாட்டினுக்காக டெயிலிமிரர் வக்காலத்து வாங்கிடுவது கண்டு ஆச்சரியப்பட மாட்டாய்!

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் அரசியல் சிந்தனையில் மாற்றம் ஏற்படுமானல்

## அதற்கு பெரும்பான்மையினமே பொறுப்பு!

### அ. நி. சபையில் செல்லத்தம்புவின் அரிமா முழக்கம்!

சோல்பரி காலத்துக்கு இனிவருவோம். அமைச்சர்களின் நகல் திட்டத்தின்மீது உருவாக்கப்பட்ட சோல்பரி அரசியல் திட்டம் 101 பேர் கொண்ட பாராளுமன்றத்தில் 43 தொகுதிகளை சிறுபான்மை மக்களுக்கு ஒதுக்கியது. ஆனல் அந்நேரத்தில் கூட தமிழ்த் தலைவர்கள் அமைச்சர் குழு தயாரித்துள்ள குறித்த பிரதிநிதித்துவ திட்டப்படி, சிறுபான்மை மக்களுக்கு 28 தொகுதிகள் கூட கிடைக்க முடியாது என்பதை எடுத்துக் காட்டினர்கள். 1947ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலின் பெறுபேறுகளைப் பார்த்த போது தமிழ்த் தலைவர்களின் அக்கூற்று நூற்றுக்கு நூறு சரி என்பது உறுதியாக நிருபிக்கப்பட்டது.



#### நம்பிக்கை சிதைந்தது!

இந்த அமைச்சர் குழுவிலிருந்த உறுப்பினர்கள், இப்போதைய அரசியலமைப்பின்கீழ் முதலாவது அரசாங்கத்தை அமைத்தார்கள். இத் திட்டத்தின்படி, சிறுபான்மை மக்களுக்கு 43 பிரதிநிதித்துவஸ்தனங்கள் கிடைத்திருக்க வேண்டுமென அவர்கள் அந்தரங்கசுத்தியாக எண்ணியிருந்தனர். 1960ம் ஆண்டு தொகுதி நிர்ணயத்துடன் நிலைமை இன்னும் மோசமடைந்தது. 1947ம் ஆண்டு 101 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் சிறுபான்மை மக்களுக்கு 28 பேர் பிரதிநிதிகளாக இருந்தார்கள். அதேவேளை 1960ம் ஆண்டு முதல் 151 சம் தமிழர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டன. பெரும்பான்மை இனத்தினரின் பிரதிநிதித்துவத்தை இச்சபையில் அதிகரிக்கவே இவர்கள் பயன்படுத்தப்பட்கம் தனது பெரும்பான்மை பலத்தைப் பிரயோகித்து நிராகரித்துவிட்டது. நாங்கள் இப்போது மிகவும் முக்கியமான கட்டத்துக்கு வந்திருக்கிறோம். 11ம், 12ம் அடிப்படைத் தீர்மானங்கள் எந்த முறையில் இங்கு இறுதியாக உருவாக்கப்படுகின்றனவோ, அதைப் பொறுத்தே இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு தமிழனது விதியும் ஊசலாடப் போகின்றது. நாங்கள் எங்கள் திருத்தங்களை மொழிப் பிரச்சினையில் இணக்கம் காணும் கருத்துடனேயே சமர்ப்பித்திருக்கிறோம். இந்நாட்டில் சிங்கள மக்களுடன் சமாதானத்துடன் வாழ்வதற்காகவே இத் திருத்தங்களை கொண்டு வந்திருக்கிறோம்—

அந்நியர் இந்நாட்டில் காலடி எடுத்து வைக்கு முன்னர் நாங்கள் சுயாதீனமுள்ள மக்களாக இருந்தோம். அந்நியர் ஆட்சியில் சமத்துவமுள்ளவர்களாக இருந்தோம். சுதந்திரம் பெற்ற பின்னர் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்பட்டு விட்டோம்.

எங்கள் அச்சங்களை இந்த அரசியலமைப்பும் மாற்றுவிட்டால், அவைகள் எமது மக்களின் மனங்களில் ஆழமாக

## கிளர்ச்சிகளிலும் புரட்சிகளிலும் தமிழர்களை ஈடுபட விடாமல் தடுத்து வைத்திருப்பது தமிழரசே!

தால், 1947 பொதுத் தேர்தலின் பின்னர் தங்கள் தவறை உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். சிறுபான்மை சமூகங்களின் அபிலாஷைகளும் நம்பிக்கைகளும் துண்டு துண்டாகச் சிதறிவிட்டதென்பதை அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். அவர்களது உணர்ச்சிகளுக்கு ஈடு செய்ய என்ன நடைபெற்றது? இந்நாட்டின் விசுவாசமிக்க பிரஜைகளாக அவர்கள் வாழ்வதற்கு என்ன நடவடிக்கையெடுத்தார்கள்? இதற்கான பதில்கள் இங்கு பதியப்படவேண்டியதவசியம்.

அந்நியர் இந்நாட்டில் காலடி எடுத்துவைப்பதற்கு முன்னர், இந்நாட்டில் தமிழர்கள் இருந்த நிலையை இங்கு எடுத்துரைத்தேன். 1931ம் ஆண்டு வரை அந்நியர் ஆட்சியின் கீழ் தமிழ் மக்கள் இருந்த நிலையையும், டொனமூர் கால வரலாற்றையும் இங்கு கூறினேன். 1947ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின், இன்றைய கால கட்டத்தில் என்ன நடைபெற்றதென்பதையும் இங்கு பதிந்து வைக்க வேண்டும்.

சிறுபான்மை சமூகங்களுக்கு போதுமான அளவு பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை அந்தத் தேர்தல் முடிவு சிதைத்து விட்டது. ஆனலும் எதிர்காலத்திலாவது ஏதாவது ஆறுதல் கிடைக்கும் என்று அன்று தமிழ் மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனல் பின்னர் நடைபெற்றதென்ன?

#### தாய்மொழி உரிமை பறிக்கப்பட்டது

1947ம் ஆண்டு வாக்காளர்களாக இருந்த 10 இலட் பேரைக்கொண்ட பாராளுமன்றத்திலும் 28 பேரே பிரதிநிதிகளாக இருந்து வருகிறார்கள். தாய்மொழி தனது ஆட்சிமொழி அந்தஸ்தை 1956ம் ஆண்டு இழந்தது. சோல்பரி ஆட்சியின் கீழ் நமக்கு நடந்த அநீதிகளின் சுருக்கம் இதுவே.

புதிய அரசியல் திட்டத்தை உருவாக்குவதற்கு வரும்படி பிரதமர் எங்களை அழைத்தபோது, நாங்கள் இதே விரக்தியடைந்த உள்ளத்துடனேயே அதை ஏற்றுக் கொண்டோம். அரசியல் நிர்ணய சபையில் ஆரம்ப முதலே கலந்து கொள்ளாது அதைப் புறக்கணிக்கவேண்டும் என்று எங்களில் பலர் கருதினேம். எங்கள் குரல் அரசியல் நிர்ணய சபையில் கவனிப்பாரற்றுப் போகுமென்றும், அரசாங்கம் உருவாக்கும் அரசியலமைப்பே எவ்வித மாற்றத்துக்கும் உள்ளாகாது சட்டமாகுமென்றும், எம்மில் பலர் கருதினேம்.

நாங்கள் சிலர் அக்கருத்தைப் பலமாக எதிர்த்தோம் பெரும்பான்மை இனத்துக்கு தமிழரசுக் கட்சி நேசக் கரத்தை நீட்டுவது அவசியம் என்று நாங்கள் வாதிட்டோம். பிரதமர் நீதியுடன் நடந்து புதிய அரசியலமைப்பு ரீதியாக எங்கள் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காணுவார் என்று எதிர்பார்த்தோம்.

இவ்வித நம்பிக்கையுடன் தான் அரசியல் நிர்ணய சபைக்குள் நாம் நுழைந்தோம். ஆனல் நாங்கள் இங்கே கண்டதென்ன? எங்களால் இச்சபையில் கொண்டுவரப்பட்ட சகல திருத்தங்களையும் அரசாங் வேரோடிவிடும். அதன் காரணமாக சிங்களமக்களுடன் சேர்ந்து வாழவேண்டும் என்ற எண்ணமும் உடைந்து விடும்!

#### தமிழர்தலைமை தமிழரசுக்கட்சிக்கே

இந்த சந்தர்ப்பத்தில் காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயகா, "நதிகள் பின்னேக்கி ஓடுவதில்லை" என்று கூறியதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 25 ஆண்டுகளுக்கு முன் தமிழ் தலைமை சேர். அருணசலம், இராமநாதன் போன்ரேரிடம் இருந்தது. அவர்களது கொள்கைகள் நன்மை விளைவிக்காது தோற்றுப் போனதால், தமிழ் காங்கிரஸ் தோன்றியது; தமிழ் காங்கிரஸ் தலைமையும் இதில் தோல்வியடைந்ததால் தங்களை வழிநடத்தும் உரிமையை தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியிடம் ஒப்படைத்தனர்.

கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியை ஆதரித்து வருகிறார்கள். அடுத்தடுத்து தொடர்பாக நடைபெற்ற ஐந்து பொதுத் தேர்தல்களிலும், இச்சபைக்கு அனுப்பப்பட்ட தமிழ் பிரதிநிதிகளில் 65 வீதமானேர் தமிழரசுக்கட்சியை சேர்ந்தவர்கள். இந்நாட்டின் பொதுத்தேர்தல் வரலாற்றிலேயே வேறு எந்தக்கட்சியும் சாதிக்காத சாதனை இது. 1952ம் ஆண்டு முதல், ஒருமுறை அதிகாரத்திலிருந்த அரசாங்கத்தை மீண்டும் அதிகார பீடத்துக்கு அனுப்பாத சிங்கள மக்களிடையே காணமுடியாத காட்சி இது.

1952ம் ஆண்டு பெரும் [illegible]

(7ம் பக்கம் பார்க்க)

## வாசகர் கருத்து

அன்புள்ள ஆசிரியருக்கு:—

தமிழினத்தை தட்டியெழுப்புவதற்கு சுதந்திரன் மூலம் நீங்கள் செய்து வரும் பணியைக்கண்டு நிச்சயமாக ஒவ்வொரு தமிழுள்ளமும் பூரிப்படையவே செய்யும். நீங்கள் எழுதிய 'நான் கைதி ஆனது ஏன்' கட்டுரை மூலம், உங்களது சுயநலமற்ற உள்ளத்தையும் தமிழே உயிர் மூச்சு என்ற இலட்சியவெறியையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

சுயநலத்துக்காக எதையும் செய்யத்தயங்காதவர்கள் தமிழ் சமுதாயத்திலிடையே பெருகிவருகையில் இன விடுதலையும் மொழி விடுதலையுமே உயிர் மூச்சாகக் கொண்டு தமிழரசு இயக்கத்தின் குரலை நீங்கள் எடுத்துக் கூறிவருவது பாராட்டத்தக்கது. தமிழ் நலமே குறிக்கோளாகக் கொண்டு அந்தக் குறிக்கொளுக்காக எதையும் செய்யப் பின் நிற்காத உங்கள் தியாகம், நிச்சயம் என் போன்ருேரை கவரவே செய்யும்.

உங்கள் எழுத்துக்களில் அண்ணவைக் காண்கின்றேன். உண்மைத்தமிழனுக்கு ஓர் இலக்கணமாக விளங்கும் உங்கள் இலட்சியப் பணி மேலும் தொடர வேண்டுமென்று தமிழ்த் தாயை வேண்டுகின்றேன். தமிழுக்காக நீங்கள் செய்யும் தியாகத்துக்கு உங்களை வணங்குகின்றேன்

—பொ. கலைச்செல்வி.
ஏழாலை மேற்கு.

★

அன்பின் கோவை அண்ணுவுக்கு!—

நீங்கள் எழுதிய 'நான் கைதி ஆனது ஏன்' கட்டுரையை அண்மையில்தான் படிக்கும் சந்தர்ப்பம் எனக்கு கிட்டியது. சுதந்திரன் ஆசிரியர் என்ற அளவில் மட்டும் எம்மதிப்பை பெற்றிருந்த தாங்கள், சிறை சென்றுவந்ததற்கு பிறகு உணர்ச்சியுள்ள உத்தமத்தமிழன் என்ற பட்டத்தையும் எம்மிடமிருந்து தட்டிப்பறித்து விட்டீர்கள். நான் மட்டுமல்ல—எந்தத் தமிழனுமே அதை வாசித்தால் உணர்ச்சியடைவான்.

—செ. பொன்னம்பலம்.
தமிழரசுவாலிப முன்னணி
மீசாலை.

★

அன்பின் கோவைமகேசன் அவர்கட்கு:—

தாங்கள் வாரந்தோறும் சுதந்திரன் மூலம் தமிழ் மக்களின் உணர்ச்சிகளை தட்டியெழுப்பி வருகிறீர்கள். சகோதரத்துவத்தை விரும்பும் தமிழர்களின் உரிமைகளை ஏப்பமிடும் ஆளும் கட்சியின் வண்டவாளங்களை தண்டவாளம் ஏற்றி தமிழ் மக்களின் சுபீட்சமான சுதந்திர வாழ்க்கைக்கு முன் நிற்கும் சுதந்திரன் தமிழ் மக்கள் எல்லோர் கையிலும் திகழ வேண்டிய ஒரு பொன்னிதழாகும்.

—வி. எம். ஜெருக்
யாழ்ப்பாணம்

★

அன்பான ஆசிரியருக்கு:—

சுதந்திரனில் "வங்க நாட்டு விடுதலைப்போரின் வீரவரலாறு" என்ற மூரசொலி மாறனின் கட்டுரையை தந்த தங்களுக்கு எனது வாழ்த்துக்கள். வங்கத்தவரைப் போலவே ஈழத் தமிழருக்கும் ஒரு வீரவரலாறு உண்டு. அதனை நாம் உலக நாடுகளறிய வெளிக்காட்டும் நாள் காண உழைப்போம்.

—வவுணதீவு
இரத்தினசிங்கம்.

★

அன்பின் கோவை அண்ணுவுக்கு:—

கண்ணிரண்டும் விற்று சித்திரம் வாங்கினல் கைகொட்டிச்சிரியரோ என்னும் கூற்றுக்கு இணங்க தமிழ் இனத்தை விலைபேசி விற்க துடிக்கும் தமிழ் துரோகிகளுக்கு தங்களுடைய அரசியல் மடல் நல்ல பாடம் படிப்பிக்கின்றது. ஈழத்தமிழினத்தின் விடுதலை ஏடாக வெளி வரும் சுதந்திரனை காணும் போது தமிழ் இனம் களிப்படைகின்றது.

—த. செல்வராசா.
6ம் வட்டாரம், புங்குடுதீவு.

★

சுதந்திரன் ஆசிரியரவர்கட்கு!—

'நான் கைதி ஆனது ஏன்' என்ற தங்கள் கட்டுரையை நான் வாசித்தபோது தங்களுடன் நேரில் பேசுவது போன்ற பிரமை எனக்கு ஏற்பட்டது. மக்களுக்கு தமிழுணர்வையூட்டும் சுதந்திரனை நான் வரவேற்கிறேன்.

—'சென்ரி'
வேலணை-1

சுதந்திரன் இதழை விதந்தரு வகையில்
இதந்தரும் செய்தி பதிந்திடும் மனதை
கவர்ந்திடும் வார்த்தை கருத்துடை நோக்கு
உவந்திடும் தமிழர் உளந்தனில் திகழ்ந்து
எழில் மிகு மொழியில் அழல் என வார்த்தை
விழல் மொழியில்லா வீறுடை வார்த்தை
தினம் தினம் மனதில் செறிந்திடும் எண்ணம்
மனமதை திறக்கும் அரசியல் மடல்
ஒருகணம் நினைத்தால் தரு மொரு உணர்ச்சி
வருமொரு வேகம் தரும் மொழி மோகம்
கைதியாகியகதை தந்த கருத்தும்
தைரியமான உம் உள்ளத் திறத்தை
பத்திரிகையின் உத்தமன் நீரென
பாரும் புகழ, பகர்வேன் பல புகழ்
சீருடன் வாழ்ந்தே செய்வீர் இச்சேவை

—ஆதிமூர்த்தி
சுழிபுரம்.

ஃ ஃ ஃ

அண்ணவின் வழிபிற் சென்று
அந்தமிழர் அடிமை நீங்க
எண்ணரிய கருத்து ரைத்தே
இளைஞர்கமக் கெழுச்சி யூட்டும்
திண்ணமிகு கொள்கை கொண்ட
திருக்கோவை மகேச நண்பா!
கண்ணிழந்த அம்மை ஆட்சிக்
கடுஞ்சிறையால் உயர்ந்தாய் வாழி

—"அம்பலத்தாடி"
கஞவாஞ்சிகுடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'பல்லவன்'
தொண்டமானாறு.

கே: அ. நி. சபையிலிருந்து விலகியுள்ள தமிழரசுக்கட்சி மொழியுரிமை மறுக்கப் பட்டதால், முஜீபுர் சுயாட்சிக் கோரிக்கையை கைவிட்டு தனிநாடு பிரகடனப்படுத்தியதுபோல், தனி நாடு பிரகடனப் படுத்திஞல் என்ன?

ப: காலம், நேரம், சூழ்நிலையைக் கவனிக்காமல் தம்மை சரவரத் தயார் படுத்திக்கொள்ளாமல்—வெளி நாடுகளின் உதவி எவ்வளவு தூரம் தமக்கு கிடைக்கும் என்பதையெல்லாம் எடைபோட்டுப் பார்க்காமல்—அவசரப்பட்டு முஜிபுர் எடுத்த முடிவினுல் வங்காள தேசம் இன்று அல்லோல கல்லோலப்படுவதைத் தெரிந்துகொண்ட பின்னருமா இக்கேள்வியைக் கேட்கிறீர்கள்? — ''வினைவலியும் தன் வலியும், மாற்ருன் வலியும், துணை வலியும் தூக்கி செயல்'' என்று வள்ளுவர் கூறியதை ஒருபோதும் தமிழரசுக்கட்சி மறந்து விடாது!

கே: பருத்தித்துறை பா: உ. வைப்பற்றி சில வரிகள்...?

ப: தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்; வாழ்வில் எளிமையைக் கடைப்பிடிப்பவர்; வரலாறும், பொருளியலும் நன்கு புரிந்தவர்; தமிழரசுக்கட்சி நடாத்திய அறப்போராட்டங்களில் எல்லாம் ஈடுபட்டு அடி உதைபட்டவர்; தமது தொகுதி மக்களைக்காப்பாற்றுவதற்காக இராணுவத்தின் பூட்ஸ்கால் உதையை தமது நெஞ்சிலே ஏற்றவர்: இவருக்குவேண்டியது கொஞ்சம் சுறுசுறுப்பு!

ஃ

எம். கே. செல்வரட்ணம்,
தச்சன்தோப்பு,

கே: பந்தம் பிடித்து முன்னேறுபவர்களைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: பந்து எவ்வளவு வேகமாக மேலே எழுகிறதோ அதே வேகத்தில் கீழே வருவதுபோல பந்தம் பிடித்து முன்னேறுபவர்களும் எவ்வளவு வேகமாக முன்னேறுகிருர்களோ அதே வேகத்தில் கீழே தள்ளவும் படுவார்கள்!

ஃ

த. வசந்தாதேவி,
அக்கரைப்பற்று:

கே: தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் தற்பொழுது என்ன செய்து கொண்டிருக்கின்ருர்?

ப: போகிறவர், வருகிறவர்களிடமெல்லாம் தமிழரசுக் கட்சியைத் திட்டிக் கொண்டேயிருக்கிருராம்!

கே: நாம் வீடுகளில் வளர்க்கும் நாய்கள் நம்மைக் கண்டால் வாலையாவது ஆட்டுகிறது; ஆனுல் தமிழரசுக் கட்சியிலேயிருந்து வயிறு பிழைத்த ஒரு சிலர் இக்கட்சிக்கே துரோகம் செய்ய நினைக்கிருர்களே; இவர்களென்ன நாயிலும் பார்க்க இழிவானவர்களா?

ப: நிச்சயமாக!

ஃ

செ. புவனநாயகி,
நொச்சிமோட்டை,

கே: தினபதியாருக்கு தமிழ் மீது, தமிழ்த் தலைவர்கள் மீது, தமிழ் மக்கள் மீது அப்படி என்ன வெறுப்பு?

ப: செனட்டர் பதவி மீதுள்ள விருப்பு!

ஃ

சிவா: இந்திராணி,
புங்குடுதீவு:

கே: தளபதி அமிர்தலிங்கம் இல்லாத பாராளுமன்றம் இப்பொழுது எப்படி காட்சி அளிக்கின்றது?

ப: பொட்டும், பூவுமில்லாத பெண்ணைப்போல!

கே: அரசியல் நிர்ணய சபையை தமிழரசு பகிஷ்கரித்தவுடன் வடக்கு கிழக்கு நீதிமன்ற மொழி தமிழ் என கொல்வின் அறிவித்ததின் காரணம் என்ன?

ப: அப்படி கொல்வின் எதுவும் அறிவிக்கவில்லை. அது வீரகேசரியின் புருடா!

ஃ

பொன். யேசுரத்தினம்,
குடத்தனை.

கே: இந்திய தி. மு. க. தமிழுக்கென்று ஒரு தனி நாடு உருவாக்கும் கொள்கையை நிரந்தரமாகவே கைவிட்டு விட்டதா? மாநில சுயாட்சியுடன் ஓய்வு பெறுமா?

ப: தி. மு. கழகம், தனி நாட்டுக் கோரிக்கையை கைவிட்டுள்ளதாக அறிவித்திருக்கிறதே தவிர, கொள்கையை கை விட்டதாக அறிவிக்கவில்லை; காலம், நேரம், சூழ்நிலை, இடம், பொருள், ஏவல் அறிந்து பணியாற்றி வருகிருர் கலைஞர் கருணாநிதி. தி. மு. க. ஒருவேளை அக்கொள்கையைக் கைவிட்டாலும் கூட, வருங்காலத்தில் தமிழர்க்கோர் தனி நாடு அமையப் போவதை யாராலும் தடுக்க முடியாது!

ஃ

கரன்,
கட்டுடை.

கே: மார்ட்டின் அ. நி. சபையில் பங்கு கொள்வது பற்றி த. கா. வின் மூன்று பா. உ. க்களும் என்ன நினைப்பார்கள்?

ப: தங்கள் துரோகத்தில் பங்குகொண்டு கைகொடுக்க வந்த 'ஆபத்பாந்தவர்' என்று நினைக்கலாம்!

தணிக்கை

ஃ

எஸ். எஸ். ஆர்.,
யாழ்ப்பாணம்:

கே: ஒருதொகுதியின் பா. உ. வாகச் செல்ல விரும்புபவர் எதை எதை செய்ய வேண்டும்?

ப: தொகுதி மக்களின் வாக்குகளைப் பெற, மனைவியை வீடு-வீடாக அனுப்பி 'தாலிப்பிச்சை' கேட்க வைக்க வேண்டும்; உள்ளூராட்சி மன்றங்களில் பதவியிலிருந்தபோது களவெடுத்திருந்தால் அதை மக்களுக்கு தெரியாமல் மறைக்கத் தெரிய வேண்டும்! வாயில் வந்தபடி வாக்குறுதி கொடுக்க தெரிய வேண்டும்!

கே: இரும்பு மனிதர் நாகநாதனுக்கும் சிமோல் அருளம்பலத்துக்கு முள்ள வித்தியாசமென்ன?

ப: முதல்வர் புலி; இரண்டாமவர் பூனை!

ஃ

பா. நாதன்,
அல்வாய்.

கே: உலகில் தமிழ் மக்களின் சனத்தொகை எவ்வளவு?

ப: ஏறத்தாழ ஆறுகோடி!

கே: உலகின் முக்கிய மொழிகளில் ஒன்ருக தமிழ் இடம் பெறவில்லையா? அல்லது ஜே. ஆருக்கு மொழிகள் பற்றிய புள்ளி விபரங்கள் தெரியவில்லையோ?

ப: புள்ளி விபரங்கள் தெரியாமல் அல்ல; தமிழையும் தமது பட்டியலில் சேர்க்க அவருக்கு மனம் விரிய வில்லை; அவ்வளவு தான்! சூரியனை கையால் மறைப்பதால் உலகம் இருண்டாவிடும்?

ஃ

'மலரவன்',
மொறட்டுவ.

கே: தாங்கள் சமஷ்டி கட்சியென்றும் தமிழரசுக் கட்சியென்றும் தங்கள் இயக்கத்துக்கு இரு பெயர்களை ஏன் வைத்திருக்கிறீர்கள்?

ப: இது எத்தனையோ தடவைகள் அரசியல் புரியாத முண்டங்களால் எழுப்பப் பட்டு பதில் அளிக்கப்பட்ட கேள்வியாகும். தமிழரசுக் கட்சிக்கு ஒரே ஒரு பெயர் தான் உண்டு. அதுதான் இலங்கைத் தமிழரசுக்கட்சி. தமிழரசுக் கட்சியை மாற்றுக்கட்சியினரும் சில பத்திரிகையாளர்களும் அரசியல் வாதிகளும் 'சமஷ்டிக்கட்சி' என்று அழைக்கின்றனர் என்ருல் அதற்கு கட்சி எப்படிப் பொறுப்பாகும்?

கே: நீங்கள் தனியாட்சியையா தன்னாட்சியையா விரும்புகிறீர்கள்?

ப: தமிழினத்தைப் பொறுத்தவரை 'குழந்தை' பிறக்க வேண்டுமென்பது முக்கியமே தவிர அது ஆண் குழந்தையாக இருக்கவேண்டுமா அல்லது பெண் குழந்தையாக இருக்க வேண்டுமா என்பது பற்றி நான் அதிகம் அலட்டிக்கொள்வதில்லை!

கே: தனியாட்சிக் கோரிக்கையை ஆதரிப்பதுபோல சில சமயங்களிலும் தன்னாட்சி கோரிக்கையை ஆதரிப்பதுபோல வேறு சில சமயங்களிலும் எழுதுகிறீர்கள். ஏன் இந்தக் கொள்கைக் குழப்பம்?

ப: எனக்கு எவ்வித குழப்பமும் கிடையாது; என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் நீங்கள் தான் குழம்புகிறீர்கள்; இன்று தமிழ் மக்கள் நாடெங்கும் சிதறி வாழ்ந்து வரும் ஒரு சூழ்நிலையில்—அவர்களது சமூக, புவியியல், பொருளாதாரம் போன்ற பல காரணங்களை முன்னிட்டு— தமிழ் பிரதேசங்களில் தன்னாட்சியமைப்பதே புத்திசாலித்தனம் என்பதே எனது கருத்து. ஆனுல் தனியாட்சிக்குப் போராடுவதுதான் இனி நமக்குரிய ஒரேவழியென்ற நிலை ஏற்பட்டு; தமிழ் மக்களும் அதற்கு தயாராகிவிட்டால் தனியாட்சிக் கோரிக்கையை ஆதரிக்க நான் தயங்கமாட்டேன்.

ஃ

சி. நடராசா,
மீசாலை.

கே: திரிபுவாதிகளும் சந்தர்ப்பவாதிகளும் ஒன்று சேர்ந்தால்......?

ப: திரிபுவாதிகளும் இன்று சந்தர்ப்பவாதிகளாகத் தானே மாறிவிட்டார்கள்!

ஃ

சொல்லின் செல்வன்,
கொட்டடி.

கே: அண்ணா கட்டிக் காத்துவந்த மதுவிலக்கு சட்டத்தை கருணாநிதி இரத்துப் பண்ணுவது முறையானதா?

ப: அப்பா உயிருடன் இருந்த போது அன்புடன் வளர்த்தார் என்பதற்காக வெறிபிடித்து விட்ட ஒரு நாயை மகன் சுட்டுத்தள்ளுவது தவறு என்கிறீர்களா?

கே: எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை, பி. ஆர். செல்வநாயகம் எப்போதாவது சந்தித்ததுண்டா?

ப: பூரணை நிலவை அமாவாசை இருட்டு எப்போதாவது சந்தித்ததுண்டா!

கே: டட்லி ஆட்சிக்கும், சிறிமாவோவின் ஆட்சிக்கும் வித்தியாசம் என்ன?

ப: முன்னையது பிரமச்சாரியின் ஆட்சி; பின்னையது விதவையின் ஆட்சி!

ஃ

'தமிழன்',
பூண்டுலோயா:

கே: தினபதியார் தமிழனு அல்லது வேறு இனத்தவரா?

ப: ஜுதாஸ் இனத்தவர்!

கே: நாரதர் தினபதியார் பொய்ச்செய்தி வெளியிடுவதில் நிபுணர் போலிருக்கிறதே!

ப: பொய்ச்செய்தியையும் சரியாக வெளியிடத் தெரியாதவர்!

ஃ

வி. திருச்செல்வம்,
சங்கானை.

கே: இந்திராவுக்கும் சிறிமாவோக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: மாணிக்கக்கல்லுக்கும் கண்ணாடிக்கல்லுக்குமுள்ள வேறுபாடுதான்!

கே: தந்தை செல்வாவின் தற்போதைய வயது என்ன?

ப: எழுபத்து நான்கு. இந்த வயதிலும் ஏனைய பல தமிழரசு பா. உ. க்களை விட சுறுசுறுப்புடன் காரியமாற்றுகிருர் தமிழரசுத் தந்தை!

ஃ

ந. மயில்வாகனம்,
கரணவாய் தெற்கு:

கே: தமிழ் வளர்த்த பெரியார்களுக்கு முத்திரை வெளியிடுவதாக பல மாதங்களுக்கு முன் முத்திரை மந்திரி கூறினுரே அது என்னுச்சு?

ப: தமிழை ஒழித்துக்கட்டுவதற்கு ஒத்துழைத்துக் கொண்டே தமிழை வளர்த்தவர்களுக்கு முத்திரை வெளியிட்டால்கூட அதனுல் என்ன பலன்? கசாப்பு கடைக்காரன் ஜீவகாருண்யம்பேசினுல் உலகம் அவனை நம்புமா?

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194ஏ, பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12

● சிலருக்கு என்னைப் பிடிக்கவில்லை. நான் என்ன செய்யட்டும்...? சிலரை எனக்குப் பிடிக்கவில்லை. தமிழ்ப்பெண்களாய் இருந்தும் தமிழ்ப் பெண்களாய் வாழாத தமிழ்ப் பெண்களை நான் சாடுகிறேன். சிலர் சினக்கவும் செய்கிருர்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்வேன். பெண்களை நான் தெய்வமாய் மதிக்கிறேன். அதனுல் தான் பெண்கள் தவறு விடும்போது மிகவும் ஆத்திரமடைந்து கவிபாடுகிறேன். சமுதாயத்தை உருவாக்கும் பெண் தூய தங்கமாக இருக்கவேண்டும். திரும்பவும் சொல்கிறேன்... நான் தவறுவிடும் பெண்களை மட்டுமே தாக்குகிறேன். என்னைக் கோபிக்காதீர்கள். உங்கள் சினம் அநீதியானது.

—அத்தான்.

# இதற்குத்தான் மறைத்தாளா?

நேற்றுத்தான் கடைத்தெருவில் நின்றேனையா...
நிறச்சேலைக் காரியும் அங்கேதான் நின்ருள்!
ஆற்றுமணல் போல் மஞ்சள் அழகு மேனி!
அவள் கண்போல் இன்னெருகண் உலகில் இல்லை!
காற்றினிலே தென்னங்கீற் ருேலை காட்டும்
கலகலப்புக் குழைச்சல் அவள் கவர்ச்சியாகும்!
பாற்கடலைக் கண்டதில்லை... இவள் பல் காண்போர்
பாற்கடலை மறுப்பதற்கும் நியாயமில்லை!

மார்புகளை வெளிக்காட்டி ஆடை கட்டும்
மங்கையர்கள் பெருகிவரும் தமிழர் மண்ணில்
தேரழகி கழுத்துவரை இறுக மூடும்
செம்பட்டு மேற்சட்டை தரித்து நின்ருள்!
'பார் முழுதும் இவள்காலில் விழாதா?' என்றே
பண்பாட்டுப் பித்தன் யான் மயங்கும் வேளை
ஓர் நொடியில் என் கனவை உடைத்தாள் பாவி!
உடைத்தாளே தமிழ்நெஞ்சை உடைத்தேவிட்டாள்!

இடைத்துடிப்பும் மேசையிலே எழில் முழங்கை
இட்டமர்த்திக் கடைக்காரன் இடத்தே மங்கை
குடைக்கு விலை கேட்கின்ற கோலமொன்றும்
குங்குமப்பூ வாய்ச்சிரிப்பும் போதைகொட்ட
கடைப்புறத்தே ஓரிளைஞன் காரிகை பால்
கண்கொடுத்தான் இவள்பாவி கழுத்துச்சட்டை
இடைக் கிடந்த தாலியினைக் கையால் உள்ளே
இட்டு மறைத்தாள் கண்டேன்... ஏங்கினேனே...

கற்பினுக்கோர் அடையாளமான தாலி
காரிகையின் இளமையினைக் குறைக்குமென்ருே
மற்றவர்கள் காணுமல் கழுத்துமட்டும்
மறைக்கின்ற நெடுங்கழுத்துச் சட்டைபோட்டாள்?
பொற்குரும்பை மறைத்த தமிழ்ப் பூவையென்று
புலவன்யான் எண்ணியதும் பொய்யே! பொய்யே!
உற்ற கணவனையன்ருே மறைத்தாள் பாவி...
உய்வாளா...? உடல் புழுத்துச் செத்துப்போவாள்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாளர் 'உளறுவாயர்'

தமிழ் காங்கிரஸ்கட்சியை ஆழக்குழிதோண்டிப் புதைத்து அந்திமக்கிரியைகளும் செய்து முடித்துவிட்ட 'உளறுவாயர்' ஒருவர் தமிழரசுக்கட்சியைப்பற்றியும் இப்போது உளறத் தொடங்கியுள்ளார். இவரைப் போன்றவர்களின் உளறல்களைப் பிரசுரிப்பதையே கதிமோட்சமாக நினைக்கும் தினபதியாரும் அவற்றைப் பிரசுரித்து தனது பக்கங்களை அசிங்கப் படுத்திவருகிறார்!

தமிழரசுக் கட்சியினருக்கு தமிழ் மக்களின் எதிர்காலத்தைவிட தமது கட்சியின் எதிர்காலத்திலும் தமது சொந்த வருமானத்திலுமே அக்கறையிருக்கிறது என்று கூறியிருக்கிறார் இந்த உளறுவாயர்.

தமிழரசுக் கட்சி வேறு; தமிழ் மக்கள் வேறு; என்ற ஓர் மாயாவாதக்கருத்தை மக்கள் மத்தியில் பரப்பிவிடுவதற்கு உளறுவாயரும் இந்நாட்டின் சில பத்திரிகைகளும் முயற்சியெடுத்து வருவதனை நாமறிவோம்.

தமிழரசுக் கட்சி யென்பது தமிழரல்லாத யாரோ ஒரு சிலரால் தனிப்பட்ட ஒரு சிலரது நன்மைக்காக நடத்தப்படும் ஒரு கட்சியல்ல; தமிழ் மக்களால் தமிழ் மக்களுக்காக நடத்தப்படும் தமிழ் மக்களின் ஒரே கட்சி தமிழரசுக்கட்சி.

தமிழ் காங்கிரஸ் என்றவோர்கட்சியும் முன்பு தமிழ் மக்களுக்கிடையே இருந்து வந்தது. அந்தக் கட்சியை தங்களின் சுயநலத்துக்காக சுட்டுக்கொழுத்தி சாம்பரையும் கடலில் கரைத்து விட்டவர்கள் இந்த உளறுவாயரும் அவரது இரு 'சின்'களும் என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள்.

இன்று தமிழ் மக்களுக்காக வாதாடவும் போராடவும் இருக்கின்ற ஒரேகட்சி இலங்கைத் தமிழரசுக்கட்சிதான் தமிழரசுக்கட்சி எடுக்கின்ற ஒவ்வொரு முடிவும் தமிழ் மக்களின் தன் மானத்தை காக்கின்ற முடிவாக—தமிழ் மக்களின் நலன் கருதியெடுக்கின்ற முடிவாக இருப்பதை இந்நாட்டுத் தமிழ் மக்கள் அறிவார்கள்.

தமிழரசுக் கட்சியின் தலைவர்களும் தொண்டர்களும் உரிமைப் போராட்டங்கள் பலவற்றில் அடிபட்டதும், உதைபட்டதும, சிறைப்பட்டதும், சித்திரவதைப்பட்டதும், கட்சி நலனுக்காக அல்ல; தமிழினத்தின் நலனுக்காகவே;

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை, கட்சி நலன் வேறு; இனத்தின் நலன் வேறு அல்ல; கட்சி நலனே இனத்தின் நலன்; இனத்தின நலனே கட்சி நலன். தமிழினம் உடம்பு என்றால் அதன் உயிரோட்டமாக இருப்பது இலங்கைத் தமிழரசுக் கட்சி யென்பதை தமிழ் மக்கள் அனைவருமே உணர்வார்கள்.

தமிழ் மக்களின் எதிர்காலமும் தமிழரசுக்கட்சியின் எதிர் காலமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தே இருக்கிறதென்பதை தமிழன் ஒவ்வொருவனும் உணர்வான். சில உளறுவாயர்கள் உணராதது பற்றி நமக்கு கவலை இல்லை.

சொந்த வருமானத்தை பெருக்குவதிலேயே தமிழரசுக் கட்சித்தலைவர்கள் அக்கறை காட்டுகிறார்களாம்—உளறுவாயர் கூறுகிறார்.

உள்ள வருமானங்களையும் வாய்ப்புக்களையும் தமிழினத்துக்காக இழந்தவர்கள்—தங்கள் சொத்து சுகம் அனைத்தையும் தமிழினத்துக்காக கொடுத்தவர்கள்—தமிழரசுக்கட்சியினர் என்பதை தமிழினத்தவர் ஒவ்வொருவருமே அறிவர். கற்பூரத்தின் வாசம் கழுதைகளுக்கு தெரியாமலிருப்பது பற்றி நாம் கவலைப்படவில்லை!

தமிழருக்கு அரசாங்கம் தரும் சலுகைகளையும் உரிமைகளையும் தமிழரசார் தூக்கியெறியப்பார்க்கிறார்கள் என்பதும் உளறுவாயரின் குற்றச்சாட்டு.

ஐயா, உளறுவாயரே, எந்த உரிமையை—அல்லது சலுகையை தமிழ் மக்களுக்கு அரசு தந்து, அதைத் தமிழரசுக்கட்சி தூக்கியெறிந்தது? ஒன்றையாவது உம்மால் கூற முடியுமா? நீர்தான் அ. நி. சபையில் அடிப்படைத்தீர்மானங்களுக்கு திருத்தங்கள் பல கொண்டு வரப் போவதாக ஜம்பமடித்து விட்டு, பின் அவற்றை யெல்லாம் வாபஸ் பெற்றுக்கொண்டு, அம்மையார் காலைக் கழுவி அந்தப் 'புனித' நீரைப்பருகி ஆனந்தமடைந்தீரே—உம்மால் ஒரு சிறு உரிமையைத் தானும் அரசைக்கொண்டு ஏற்றுக் கொள்ளும்படி செய்ய முடிந்ததா? யாருக்கய்யா காதுகுத்தப்பார்க்கிறீர்?

தமிழரசுக் கட்சியினருக்கு 'இலங்கையர்' என்ற தேசிய சிந்தனையும் கிடையாது; தமிழ்பேசும் மக்கள் என்ற சிந்தனையும் கிடையாது; என்று கூறும் உளறுவாயரே, உமக்கு இப்போது சிந்தனையே அற்று விட்டதாகவும் விரைவில் மனநோயாளர் வைத்திய சாலையில் உம்மை அனுமதிக்க விருப்பதாகவும் மக்கள் பேசிக்கொள்ளுகிறார்களே அது உண்மைதானா?

'தமிழரசார் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன் எப்படியாவது அரசுடன் ஒட்டிவிட முயற்சிப்பார்கள்; மந்திரிப்பதவி பெற அலைவார்கள்' என்றெல்லாம் கூறியிருக்கும் உளறுவாயரே, இன்று ஆளுங்கட்சியுடன் ஒட்டியிருப்பது யார்? நீரும் உமது சகாக்களுமா தமிழரசாரா? உதைக்கும் காலை முத்தமிடுவதுயார்? 'we don't want these scvenging dogs' (தெருப் பொறுக்கி நாய்கள் எமக்கு வேண்டாம்.) என்று ஆளுங்கட்சியினர் கூறிய பின்னரும் அவர்களது அடி நக்கி இரந்து வாழும் ஈனப் பிறவிகள் யார்? அரை மந்திரிப் பதவியாவது கிடைக்க ஆண்டவன் அருளை வேண்டி 'காவடி' எடுத்தது யார்? நீரும் உமது இரு சகாக்களுமா தமிழரசுக்கட்சிக்காரரா?

'அரசியல் நிர்ணயசபையின் கடைசி இரு கூட்டங்களுக்கு முன்புவரை சென்று கையெழுத்துப் போட்டு தமது மாதாந்த அலவன்சை பெற்றுவந்தனர். இரண்டொரு தடவைகள் மட்டுமே சபை நடைபெறும் எனத்தெரிந்ததும் தமிழரசார் அதனைப் பகிஷ்கரித்தனர். இதனால் தமிழரசு எம். பீக்கள் ஒவ்வொருவருக்கும் ரூபா நூறு மட்டுமே நட்டம், என்று கூறியிருக்கிறார் திருவாளர் உளறுவாயர்.

ஐயா, உளறுவாயரே உமக்கும் எங்களுக்கும் உள்ள வித்தியாசமே இது தான். அரசியல் நிர்ணய சபைக்குப்போவதால் அல்லது அதைப் பகிஷ்கரிப்பதால், யாருக்கு எத்தனை ரூபா நட்டம் அல்லது நயம் என்று நீர் காசுக் கணக்குப் பார்க்கிறீர்!

ஆனால், நாமோ தமிழினத்தின் உரிமைப்பிரச்சினையை முன் வைத்தே இதை முடிவு செய்திருக்கிறோம்— தமிழினத்தின் தன்மானப் பிரச்சினையாக இதை நாங்கள் கருதுகிறோம். தமிழினத்தின் உரிமைகளை அங்கிகரிக்க மறுத்த அரசியல் நிர்ணய சபையைவிட்டு வெளியேறி எமது மக்களின் மானத்தை காத்திருக்கிறோம். நீரோ ஐம்பது ரூபா நட்டம் என்று 'காசுக் கணக்குப்' பேசுகிறீர்- எனவே

## 'எஸ்ஸாரெம்'

அப்பட்டமான சுயநல நோக்கு உமக்கா எங்களுக்கா?

மற்றும் ஒன்று—உமது அரசியல் அறிவீனத்தையும் இதன் மூலம் காட்டிவிட்டீர். தமிழரசுக்கட்சி வெளியேறிய பின்னர் நடைபெற்ற இரண்டு மூன்று கூட்டங்களுடன் அரசியல் நிர்ணய சபையின் அலுவல்யாவும் முடிந்து அது கலைக்கப்பட்டுவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறீர் என்பதை உமது கூற்றே எடுத்துக் காட்டுகிறது. உமது அறியாமைக்கு எமது ஆழ்ந்த அனுதாபம்!

இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள அடிப்படைத் தீர்மானங்களின்படி நகல் அரசியல் திட்டம் தயாரிக்கப் பட்டபின்னர் அ. நி. சபைக்கு கொண்டுவரப்பட்டு விவாதிக்கப்படவிருக்கிறது. அரசியலமைப்பு விவகார அமைச்சரின் கூற்றுப்படி அக்டோபர் மட்டும் அரசியல் நிர்ணய சபை தொடர்ந்து இயங்கவிருக்கிறது.

எனவே நீர் ஆனந்தமடையலாம் — அக்டோபர் வரை, அல்லது புதிய அரசியல் திட்டம் அ. நி. சபையில் நிறைவேற்றப்படும் வரை உமக்கும் அதில் ஒட்டிக் கொண்டிருக்கும் ஏனைய எட்டப்பர்களுக்கும் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தொடர்ந்து ஐம்பது ஐம்பது ரூபா கிடைக்கவிருக்கிறது! எனவே கவலையை விடுங்கள்; ஐம்பது ரூபா கிடைத்தால் போதாதா— தமிழினம எக்கேடுகெட்டால்தான் உங்களுக்கு என்ன? நன்றாக வழித்து நககுங்கள்!

அரசமைப்பு நிர்ணய சபையில் தமிழரசார் கேட்டதை விட பல சலுகைகள் தமிழ் மக்களுக்கு கிடைத்துவிட்டதாக நீர் உளறித்திரிவதைக் கேட்டு தமிழ் மக்கள் உண்மையிலேயே உம்மீது பச்சாதாபப்படுகிறார்கள் — உமது தலையில் ஆணி கழன்றுவிட்டதாக! இதற்குள் உமக்கு தலையில் 'பிசகு' ஏற்படுமென்று யார்தான் கண்டார்கள்?

தமிழ் பிரதேச நீதிமன்றங்களில் தமிழே நீதிமன்ற மொழியாக இருக்கும் என்று அரசியல் நிர்ணய சபையில் தீர்மானம் நிறைவேறியிருப்பதாக கூறும் உளறுவாயரே, உமக்கு தீர்மானங்களை வாசித்து விளங்கும் ஆற்றலில்லாவிட்டால் அதற்கு நாமா பொறுப்பு? வடக்கு, கிழக்கு நீதிமன்ற மொழி பற்றி வருங்கால தேசிய சபையே தீர்மானிக்கும் என்றே அடிப்படைத் தீர்மானம் 23 கூறுகிறது. நீரோ தமிழ் மக்களுக்கு கதையளக்கிறீர்!

உளறுவாயரே! உளறுவாயரே!! உளறலை நிறுத்தும்! ஏனெனில் உமது உளறலை கேட்டு தமிழ் மக்கள் சிரிப்பாய்ச் சிரிக்கிறார்கள்!

---

### தியாகராசாவின்

# இனத்துரோகபோக்கைஎதிர்த்து காரைநகர்மக்கள்கண்டனகுரல்!

## அ நி. சபையை பகிஷ்கரிக்கும்படி வேண்டுகோள்!

ஆளுங்கட்சியில் சேர்ந்து தமிழினத்துக்கு கொள்ளி வைத்து வரும் வட்டுக்கோட்டை பா. உ. திரு. ஆ. தியாகராசாவின் போக்கினை எதிர்த்து காரை நகர் மக்கள் கண்டனம் எழுப்பியுள்ளனர்.

காரைநகர் மக்கள் பலர் கையெழுத்திட்டு திரு. தியாகராசாவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் அரசியல் நிர்ணய சபையை திரு. தியாகராசாவும் பகிஷ்கரித்திட வேண்டுமெனக் கோரியுள்ளனர்.

திரு. தியாகராசாவுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதம் வருமாறு:—

திரு. ஆ. தியாகராசா அவர்கள்,
பாராளுமன்றஉறுப்பினர்,
வட்டுக்கோட்டை.

அன்புடையீர்,

சென்ற பொதுத்தேர்தலில் தங்களின் வெற்றிக்காக அயராது உழைத்துத் தங்களைப் பாராளுமன்றப்படி ஏற வைத்த பெருமையைச் சாரும் காரை மக்களாகிய நாம் தங்களின் கவனத்திற்கு கீழ் வரும் விடயங்களைக் கொண்டுவருவதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

தங்களால் பெருமைப்பட வேண்டும் என்ற பேராவல் கொண்ட காரை மக்களாகிய நாம் இன்றைய தங்களின் அரசியல் நிலையின் காரணத்தைக் காணமுடியாமல் தவிக்கின்றோம். செய்தித்தாள்கள் மூலம் தங்களின் அரசியலமைப்புச் சபைக் கூட்டங்களில் கலந்துகொண்டு ஆற்றிய உரைகளும், அரசியலாரோடு சேர்ந்து 28-6-71ல் அடிப்படைப் பிரேரணைக்குச் சாதகமாக வாக்களித்து, தமிழ் இனத்துக்கே அழியாத பாதகத்தைப் புரிந்தீர்கள், இதை மிகவும் வன்மையோடு கண்டிக்கிறோம். மன வருத்தத்தோடும், வெறுப்போடும் தங்கள் செய்கைக்கு விளக்கத்தை பொது மக்களாகிய எமக்கு எடுத்தியம்ப வேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

பகுதி ஒருபோதும் முழுதாக முடியாது என்பதை எமது தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராகிய உங்களுக்கு அறியவைக்க விரும்புகிறோம். எங்கள் ஒரு தொகுதி மூலம் தமிழ் இனம் முழுவதையும், ஒரு தொகுதிப் பகுதிப் பங்கின் உரிமையோடு பெரும்பான்மை இனத்திற்கு விற்பதற்கு தங்களுக்கு என்ன உரிமை? தங்களுக்கு இச் செய்கைக்கு தகுதி. தகைமை, தரம் ஏதேனும் ஒன்று இருக்கிறதா என்று கேட்க விளைகின்றோம்.


அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் பிரதிநிதிகளாக, மூன்று தொகுதிகளுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கும் நீங்கள், அக்கட்சியின் கோட்பாடு [illegible] கும் விருப்புக்கும் செவி சாய்க்காமல் தான்தோன்றித்தனமாக நடப்பது அரசியலில் அழகல்ல! கட்சியின் சீட்டைப் பெற்று பாராளுமன்றப் படிக்கட்டுகளில் பாதம் வைத்த நீங்கள், ஏறிய ஏணியை உதைத்த பெருமையைப் பெறுகிறீர்கள்? கட்சியை அரசியல் பாலைவனத்தில் தத்தளிக்க விட்டதோடு செய் நன்றி மறந்த துரோகத்திற்கும் ஆளாகிவிடுகிறீர்கள். "எந்நன்றி கொன்றார்க்கும்" என்ற குறளடியையும், "அரசியல் பிழைத்தோற்கு" என்ற சிலம்படியையும் நினைவுகூரும்படி வேண்டுகின்றோம்.

முனைவர் ஜோன்சனின் "அரசியல் கயவரின் கடைசிப் புகலிடம்" என்பதை அறியாதவர் தாங்களல்ல! நாங்களுமல்ல! ஆனால் நாம் எதிர்பார்ப்பதற்கு மாறாக, எமது எண்ணத்தில் மண்ணைப் போட்டு, தாங்கள் "மக்களே போல்வர் கயவர்" என்ற வள்ளுவத்தின் கருத்தை எமது தொகுதி மூலம் ஏன்

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப் பிரிவினை கேட்கும்படி டெல்லியே எங்களை தூண்டுகிறது!



## காவிரிநீர் உரிமையை காத்திட 4 கோடி தமிழரும் போராடுவர்!

## மத்திய அரசுக்கு முதலமைச்சர் கருணாநிதி எச்சரிக்கை!

நாம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய கோரிக்கை குப்பையில் தூக்கிப் போடப்பட்டிருக்கிறது. நாம், இந்திய ஒருமைப் பாட்டை மதித்து நடந்து வந்திருக்கிறோம். ஒரு காலத்தில் தமிழகம், திராவிடம் பிரியவேண்டும் என்று பேசியவர்கள் தான் நாங்கள். ஆனால், நாட்டு நிலைமை, உலக நிலைமை, இந்தியாவின் பாதுகாப்பு இவைகளையெல்லாம் எண்ணி பேரறிஞர் அண்ணா அவர்கள் பிரிவினைக் கொள்கையை அறவே கைவிட்டு, இந்திய ஒருமைப் பாட்டு உணர்ச்சியோடு இயங்கி வருகிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி தமிழகத்தில் நடை பெற்று வருகிறது.

வீராணம் திட்டத்திற்கு அடிகல் நாட்டியும் திட்டத் தட்ட ஒன்றரை ஆண்டு காலம் அது தொடங்காமல் இருந்ததற்குக் காரணம் மத்திய அரசின் சம்மதம் கிடைக்காததுதான். சம்மதம் வரும்போது வரட்டும், திட்டத்தை நாம் ஆரம்பிப்போம் என்ற ஆவணத்தோடு நாங்கள் ஆரம்பிக்கவில்லை. காரணம், இந்திய ஒருமைப் பாட்டின் நமக்கிருக்கிற நம்பிக்கை காரணமாக.

### அடக்க உணர்ச்சி

நீங்கள் சென்னையிலிருக்கிற செயின்ட் சார்ஜ் கோட்டையைப் பார்த்திருக்கக் கூடும். அந்தக் கோட்டையின் முன்னால் முன்பு புல் பூண்டு எல்லாம் முளைத்து இருந்த காட்சியை சில மாதங்களுக்கு முன்னால் கண்டிருக்கக்கூடும். அந்த புல் பூண்டுகளை அகற்றிவிட்டு, நல்ல அழகான செடிகளை அங்கே வளர்க்க வேண்டுமென்று எண்ணினேன். உடனே அதிகாரிகளைக் கூப்பிட்டு கூறினேன். அவர்கள் இந்தக் கோட்டை ராணுவத்தின் கீழே உள்ள இடம். ஆகவே இதிலே இருக்கிற புல் பூண்டுகளை அகற்ற வேண்டுமானால் மத்திய அரசின் சம்மதத்தைப் பெற்றாக வேண்டுமென்று சொன்னார்கள். இதற்குக் கூடவா சம்மதம், முடியாது என்று கூறிவிட்டு, ஆட்களை விட்டு புல் பூண்டுகளை களைய ஆணையிடவில்லை.

மத்தியப் பாதுகாப்புத் துறையின் உதவி அமைச்சரான திரு. கிருஷ்ண சென்னைக்கு வந்திருந்தபோது என்னுடைய காரிலேயே அவரை அழைத்துச் சென்று அந்த இடத்தைக் காட்டி, அந்தப் புல் பூண்டுகளை அகற்ற மத்திய அரசின் சம்மதம் வேண்டும், அதைத் தாருங்கள் என்று கேட்டேன். நான் டெல்லி போய் பதில் எழுதுகிறேன் என்று சொன்னார். பின்னர் பல கடிதங்களை எழுதி இனிமேல் அவையெல்லாம் களை அகற்ற சட்டம் வந்த பிறகு, இப்போது அந்தப் புல் பூண்டுகள் அகற்றப்பட்டிருக்கிறது.

அந்த அளவிற்கு மத்திய அரசிலிருந்து மாநில அரசு அதிக அதிகாரங்களைப் பெற வேண்டும் என்பது எங்களுடைய கட்சியின் உரிமை முழக்கமாக இருந்தாலும், அவைகளைப் பெறுகிற வரையில், என்ன அதிகாரங்கள் இருக்கிறதோ அந்த அதிகாரங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்கிற அந்த அடக்க உணர்ச்சி எங்களுக்கு உண்டு என்பதைக் காட்டுவதுதான் இந்தப் புல் பூண்டு விவகாரம்; வீராணம் திட்டம் விவகாரம்.

### பிரிவினைக்கு வழி கோலுவது யார்?

ஆனால் 25 கோடிக்கு அணைக்கட்டி. ஏமாவதி, கபினி, ஹேரங்கி ஆகிய அணைகளைக் கட்டி, வளம் கொழிக்கும் தமிழகத்தை, நஞ்சை குலுங்கும் தஞ்சை மாவட்டத்தைக் தரைமட்டமாக்க பாலைவனமாக ஆக்க, இங்கே வாழ்கிற தமிழர்கள் வயிறு பசியால் துடிதுடித்துச் சாகவேண்டிய கோர நிலையை உருவாக்கும் ஒரு திட்டத்தை, ஒப்பந்தத்தை மீறி, மத்திய அரசினை மதிக்காமல் மைசூர் அரசு நடத்துகிறதென்றால் உள்ள படியே இந்திய ஒருமைப்பாட்டிற்கு உலை வைப்பவர்கள் யார்? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? அவர்களுக்கு மத்திய அரசு வழங்கப்போகிற தண்டனை என்ன? இதைத்தான் நான் கேட்கவிரும்புகிறேன்.

பிரிவினை கேட்டதால் அவர்கள் பாராளுமன்ற, சட்டமன்ற தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்று சட்டம் கொண்டு வந்தார்கள். பிரிவினை கேட்டால் பத்தாண்டு கால சிறைவாசம் என்று சட்டம் கொண்டு வந்தார்கள். இன்று பிரிவினை கேட்காமலேயே மைசூர் அரசு மத்திய அரசிலிருந்து பிரிந்து போய்விட்டது என்பதைத் தான் நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

வீரேந்திர பட்டீல் இருந்த வரை ஒரு கட்சியின் மாநில முதலமைச்சராக இருந்து இதைச் செய்தார். அவர் செய்த அதே காரித்தை இன்று கவர்னர் பெயரால், ஜனாதிபதி பெயரால் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால் மறைமுகமாக மத்திய அரசே அதைச் செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தவிர இதற்கு வேறு என்ன பொருள்? மத்திய அரசே மைசூர் அரசைப் பார்த்து நீ என்னை மீறி காரியங்களைச் செய் என்று கூறினால், அது மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டாதா? பிரிவினை கேட்ட எங்களுக்கு எந்த அளவிற்கு அது பயங்கரமான வழியைக் காட்டும் என்பதைத் தயவு செய்து எண்ணிப்பாருங்கள்.

### அபாய நிலை உருவாகும்!

நான் இப்படிச் சொல்கிற காரணத்தால் அடக்கத்தை இழந்துவிட மாட்டேன். அதிகாரங்கள் அங்கே இருக்கிற வரை தலைவணங்கித் தீர வேண்டும் ஆனால் இன்னொரு மாநிலம் இவைகளை எல்லாம் மீறுகிற அளவிற்கு இன்று பலகோடி ரூபாய் செலவில் வேறு துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை எல்லாம், கல்வித்துறை, மருத்துவத் துறைகளுக்கு ஒதுக்கிய பணத்தை எல்லாம் கொண்டு போய் வேக வேகமாக அணைகளைக் கட்டத் துடிக்கிறார்கள் என்றால் எவ்வளவு பெரிய அபாயம் நமக்கு வரும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

இலக்கிய நயத்தோடு சிலம்புச் செல்வர் காவிரி நாடன் என்றும், காவிரிக்கு இலக்கியம், காவிய நயம் சேர்த்தவர்கள் தமிழ் நாட்டவர்கள் தான் என்று குறிப்பிட்டார், அப்படி நம்மை வாழ வைத்துக்கொண்டிருக்கிற காவிரி பாலாறு போல, பாழ் ஆறாக மாறிவிடாமல் இருக்கவேண்டுமேயானால் தமிழர் அணி திரண்டே ஆக வேண்டும்.

பார்வார்டு பிளாக் கட்சித் தலைவர் ஒரு இலட்சம் வீரர்களை நான் கொண்டு வருகிறேன் என்று சொன்னார்; ராமமூர்த்தி ஒரு இலட்சம் போதாது, நான்கு கோடி மக்களும் இந்தக் காரியத்தில் ஒன்று படவேண்டுமென் சொன்னார். நான்கு கோடி மக்களும் இதயசுத்தியோடு இந்தக் காரியத்தில் ஈடுபடுவோம். அரசியல் காழ்ப்புகளை மறப்போம். கொள்கை வேறுபாடுகளைத் துறப்போம். நம்முடைய உச்சரிப்பு காவிரி காவிரி என்றே இருக்கட்டும்.

நான் இன்னும் மத்திய அரசிடம் நம்பிக்கை வைத்திருக்கிறேன்: இந்திரா காந்தி அம்மையாரின் தாய் உள்ளத்திலிருந்து கனிவை எதிர்பார்க்கிறேன். தமிழ் நாட்டை மோசம் போகவிட மாட்டார்கள் என எதிர் பார்க்கிறேன்: அதே நேரத்தில் மைசூர் மக்களோடு தோழர்களாய், சகோதரர்களாய், உடன்பிறப்புகளாய் பழக வேண்டும் என்கிற அந்த உறுதியிலிருந்து நானோ, இங்கே பேசிய தலைவர்களோ சிறிதளவும் பிறழவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

## தமிழரின் அரசியல் சிந்தனையில் மாற்றம் ஏற்....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வந்த ஐ. தே. கட்சி, 1956ம் ஆண்டுத் தேர்தலில் 8பேரையுடைய கட்சியாக சுருங்கியது. சுதந்திரக்கட்சி பிரதான அங்கம்வகித்த மஹாஜன எக்சத் பெரமுன யூ. என். பி. யை தோற்கடித்து ஆட்சிக்கு வந்து சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றியது. இந்த அரசாங் 1960 மார்ச் தேர்தலில் மண் கவ்வியது.

### அகிம்சையில் நம்பிக்கை

ஆனால் ஆட்சிக்கு வந்த யூ. என். பி. அந்த ஆண்டு ஜூலை மாதத்துடன் அரசியல் பாலைவனத்துக்கு அனுப்பப்பட்டது. 1960 ஜூலையில் ஆட்சியமைத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 1964ம் ஆண்டு லங்கா சமசமாஜக்கட்சியும் ஆதரவளித்தது. இவர்கள் 1965ல் தோற்கடிக்கப்பட்டனர். இப்பொழுது இடதுசாரிகளின் முக்கூட்டு முன்னணி ஆட்சிக்கு வந்துள்ளதைப் பார்க்கிறோம்.

தமிழரசுக்கட்சி எதையும் சாதிக்கத் தவறினால், சிங்கள ஆதிக்கத்தை தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு நிலை வந்து சேரும் என்று சிலர் நினைக்கிறார்கள். இதைவிட உண்மையிலிருந்து வேறுபட்டது வேறொன்றுமில்லை—

தமிழர்களை, கிளர்ச்சிகளிலும் புரட்சிகளிலும் ஈடுபடாமல் இன்று தடுத்து வைத்திருக்கும் ஒரு சக்தியுண்டென்றால் — அது அகிம்சையில் பரிபூரண நம்பிக்கையுடையதும் அமைதிமிக்க தலைவராம் செல்வாவினால் வழி நடத்திச் செல்லப்படுவதுமான தமிழரசுக்கட்சிதான்'

எனினும், எங்கள் மத்தியில் வெறுப்பும் விரக்தியும் தலை தூக்க ஆரம்பித்துள்ளது என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டத்தான் வேண்டும். அஹிம்சைக் கொள்கையில் நம்பிக்கை கொண்டுள்ள எங்கள் தலைமை மீது அதிருப்தி கொண்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். தமிழர்கள் தனியாக பிரிந்து தங்கள் சொந்த நாட்டை நிறுவுவதன் மூலமே தலை நிமிர்ந்து வாழ முடியும் என்று கருதுகிறவர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள்

ஈழத் தமிழ் ஒற்றுமை முன்னணியும், தமிழர் சுயாட்சிக் கழகமும் தமிழரசுக்கட்சியை எதிர்த்து பல தொகுதிகளில் போட்டியிட்டார்கள். ஆனால் அவர்களுக்கு கேற்பட்ட முடிவென்ன என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்!

ஓர் இனம் என்ற அடிப்படையில் தமிழ் மக்களிடையேயும் அரசியல் சிந்தனையில் மெல்ல மெல்ல மாற்றம் ஏற்பட்டுவருகிறது. ஆனால் மாறவேண்டிய காலத்தில் நிச்சயமாக அவர்கள் மாறத்தான் போகிறார்கள்.

### பிடிவாத மனப்பான்மை

எதிர்காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் நடத்தையில் ஏதாவது பாரதூரமான மாற்றம் ஏற்படுமானால் அதற்குக் காரணம், பெரும்பான்மையினர் காட்டிய பிடிவாதமனப்பான்மையே என்று எதிர்கால வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடக் கூடிய மாதிரி நடந்துகொள்ளாதீர்கள் என்று கேட்கிறேன்.

நாங்கள், எமது இனம் இந்நாட்டில் சுயமரியாதையுடன் வாழக்கூடிய குறைந்த பட்சக் கோரிக்கைகளுக்காக எவ்வளவோ வாதாடியும் பேசியும் நீங்கள் அதற்கு இணங்கவில்லையென்றால், எங்களுக்கு [illegible] தவிர வேறு வழியில்லை.

---

## 'சுயேச்சை' மாட்டினும் சுயேச்சைகளைப் பற்றி மாட்டினும்

நான் சுயேச்சையாக இயங்குவேன்

(தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்
—சி. எக்ஸ். மாட்டின்)
வீரகேசரி (17. 7. 71)

"As for the independents they have no place in our present Governmental set up. They have no known political principles except vague Generalizations; they are Amenable to no discipline; they will have no strength or right to speak for the Tamil speaking people.
—(in an Election manifesto published by Mr. C. X. MARTIN with his signature on 2. 5. 1970)

"சுயேச்சைகளைப் பொறுத்த மட்டில் எமது தற்போதைய ஆட்சியமைப்பு முறையில் அவர்களுக்கு இஞ்சேற்றேனும் இடமில்லை. நிச்சயமற்ற அனுமானங்கள் தவிர, அவர்களிடம் அறியப்பட்ட அரசியற்கொள்கைகள் ஏதும் கிடையாது. உதிரிகள் கட்டுப்பாடுகள் எதற்கும் இணங்கிப் போகிறவர்களல்லர். தமிழ்பேசும் மக்களுக்காக குரல் எழுப்ப உரிமையோ பலமோ அற்றவர்கள் அவர்கள்"

—திரு. சி. எக்ஸ். மாட்டின் தாமே கையொப்பமிட்டு 2. 5. 1970ல் வெளியிட்ட தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாறு காட்டும் தேயிலைத்தோட்ட நாட்டுப் பாடல்கள்

# (7) அன்றைய கங்காணியும் இன்றைய கணக்கப்பிள்ளையும்

தோட்டங்கள் திறக்கப்பட்ட ஆரம்ப காலத்திலும் அதற்குப் பின்னாலும் பெரிய கங்காணிகளின் கட்டளைகளுக்கு கீழ் பணிபுரிந்து வந்தார்கள். ஒருவகையான அடிமை முறையின் கீழ் கட்டுப்பட்டுக்கிடந்தார்கள். 1841ல் போடப்பட்ட தோட்டத்தொழிலாளர்கள் தோட்டத்துரைகளுக்கு கட்டுப்பட்டவர்கள் என்ற சட்டமும் அதன் பின்னால் 1904ம் ஆண்டு தோட்ட சொந்தக்காரர்களினால் ஆரம்பிக்கப்பட்ட ''லேபர்'' கமிசனினால் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட உதவிகளும் தோட்டத் துரைகளுக்கு, குறிப்பாக தொழிலாளர்களை இங்கு கொண்டுவந்த பெரிய கங்காணிகளுக்கும், தொடர்ந்தும் அடங்கிப்பணியாற்றும் அடிமை முறையை—''பற்றுச் சீட்டு'' முறையை ஏற்படுத்தினர்.

## மலையகத்திலே.......

''பெரியகங்காணிகளின் ஆட்சி முறை'' ஒழிந்த 1921ம் ஆண்டுவரை அவர்கள் சகலதற்கும் பாத்திரமாக இருந்தனர். அந்தக் காலத்தில் பெரிய துரையோ சின்ன துரையோ தொழிலாளர் விவகாரங்களில் தலையிடுவதில்லை. பெரிய கங்காணிகளே சம்பளம் போடுவதுமுதல் எல்லா வகையான பொறுப்புகளையும் வகித்தனர். நிர்வாகத்திடமும் துரைமார்களிடமும் அவர்களுக்கு பெரும் செல்வாக்கு இருந்தது. ஒவ்வொரு தோட்டமும் கங்காணிகளின் ''குறுநிலங்''களாகவே விளங்கி வந்தது.

''குதிரை வாரதை
பாருங்கடி—குதிரை
குனிஞ்சி வாரதைப்
பாருங்கடி
குதிரைமேலே
நம்மையா கங்காணி
குனிஞ்சி சம்பளம்
கேளுங்கடி,'

அன்று குட்டி ராஜ்யம் போல் விளங்கிய தோட்டங்களில் வெள்ளைக்காரத் துரைமார்களுக்குச் சமமாக இருந்து வந்தார்கள். குதிரை சவாரி செய்யும் துரைகளோடு சரிசமமாகக் குதிரை ஏறி வேலைப்பார்த்தார்கள் என்றால் அவர்களுக்கு அன்று இருந்த செல்வாக்கு எவ்வளவு என்று தெளிவு. தொழிலாளர்களுக்குப் படி அளப்பது கூட இவர்கள் வைக்கும் மனதைப் பொறுத்தது தான்.

இந்தப் பெரியகங்காணிகள் தொழிலாளர்களுக்கு, அவர்களின் தொழில் கூலிகளை கொடுப்பதில் பல கெடுபிடி காட்டிவந்தார்கள். தொழிலாளர்களை அழைத்து வந்ததன் கடனாகவே அவர்களிடம் நடந்துகொண்டார்கள். தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்குப் பதிலாகத் தாமே அவர்களுக்கு 'வேண்டிய' துணிமணிகளையும் சாமான், சட்டிமுட்டிகளையும் வாங்கிக் கொடுத்தார்கள். மனைவி பிரசவ வேதனையேற்படுகின்ற வேளையில்தான் கங்காணியிடம் ஓடி கூனிக்குறுகி நின்று விசயத்தைச் சொல்லி மனைவிக்கு வேண்டிய மருந்துக்கும் செலவுக்கும் வாங்கி வருவது அன்றைய சாதாரணக்காட்சி...பெற்ற குழந்தைக்கு பேர்கூட அவர் வைத்தால்தான் அந்தக் குழந்தையின் தாயும் தந்தையும் அவரிடமிருந்து தப்பலாம்.

''திண்ணையை திண்ணையக்
கூட்டுங்களே
தெருவு திண்ணையக்
கூட்டுங்களே
நம்ப அய்யா கங்காணி
சாஞ்சிருக்க
சரிக திண்ணையைக்
கூட்டுங்களே''

அனைத்திற்கும் கங்காணிகளே முன் நின்றதால் அவர்களையே ''கடவுளாக'' தொழிலாளர்கள் கும்பிட்டு வந்தார்கள். முக்கியமான தினங்களில் பெருநாள் திருநாட்களில் அவர்களே முன் நின்றார்கள். அந்தக்காலங்களில் தொழிலாளப் பெண்கள் கும்மியடித்து அவரைப் புகழ்ந்துபாடி 'சந்தோஷம்' வாங்கினார்கள்.

''சொலு சொலுன்னு
மழைபொழிய
துப்பட்டித் தண்ணி
அலைமோத
சொகுசுக்காரர் நம்மய்யா
கங்காணி
துப்பட்டிப் பின்னலைப்
பாருங்கடி''
''பாகை படர்ந்ததைப்
பாருங்கடி—பாகை
பக்கம் படர்ந்ததைப்
பாருங்கடி
பாகைப்பழம் போலே
நம்மய்யா கங்காணி
பல்லு வரிசயப்
பாருங்கடி''

கணக்கப்பிள்ளை
தங்க அரைஞாண்
பளபளக்க
''வெள்ள வேட்டி
வெளுத்துக்கட்டி
வெள்ளி அரைஞாண் மேலப்
போட்டு
வீசி நடப்பாராம்
கணக்கப்பிள்ளை
வெள்ளி அரைஞாண்
நெருநெருக்க
''ஒசந்த உருவமாம்
உருலாசு மல் வேட்டி
நிரஞ்ச சடையிலே
நிப்பாராம்
கணக்கப்பிள்ளை''

கங்காணியாரைப் போலவே கணக்கப்பிள்ளையும், எல்லா வகையிலும் அவருடைய பதவி செல்வாக்கு எல்லாமே இருந்தது. தோட்டத்தில் அவருடைய தோற்றமே அவரை எடுத்துக்காட்டும். வெள்ளை வேட்டி, தலைப்பாகை கடிகாரம் கையில் பிரம்பு சகிதம் காட்சி தருவார்.

**தொ. சிக்கன்ராஜு**

(வேறு வகையில் இந்தப் பாடல்கள்:—)

''கடகடன்னு
மழைப்பெய
கம்பளித் தண்ணி
அலைமோத
காரியக்காரராம்
நம்மய்யா கங்காணி
கடுக்கன் மின்னலைப்
பாருங்கடி
''பாகைப் படந்ததைப்
பாருங்களே—அது
பத்திப் படர்ந்ததைப்
பாருங்களே
பாகை வெதைப்போலே
நம்மய்யா கங்காணி
பல்லு வரிசையைப்
பாருங்களே''

அவர்களது வாழ்க்கை முறையின் நடத்தைகளை, தோற்றம், செயல் அனைத்தையும் நயத்துடன் புகழ்ந்து பாடுவர்:

''கண்டியிலே
பெண்டாட்டி
கடலோரம் வைப்பாட்டி
தூத்துக்குடி மந்தையிலே
துட்டுக்கொரு
பெண்டாட்டி''

சொகுசுக்காரர்தான் நம்மய்யா கங்காணி ஆடம்பரமாக வாழ்ந்தார்கள். ஊருக்கு ஒரு பெண்டாட்டியும் வேளைக்கொரு வைப்பாட்டியுமாக பல பெண்களை வைத்திருந்தார்கள்.

''சாய வேட்டி
வெளுத்துக்கட்டி
தங்க அரைஞாண்மேலப்
போட்டு
சாஞ்சி நடப்பாராம்

ஆதரவாய் பேர்போடும்
அய்யா கணக்கப்பிள்ளை
''பொட்டுப் பொட்டா
புஸ்த்தகமாம்
பொன் பதிச்ச
பேனாக்கத்தி
ஆதரிச்சி பேர்போடும்
அய்யா கணக்கப்பிள்ளை

பெரிய கங்காணிகளைவிட இவர்கள் கொஞ்சம் கெடுபிடி குறைந்தவர்கள். வேலை வழங்குவது, பார்ப்பது, பெயர்போடுவது, கணக்குகள் பதிவது இவைகள்தான் இவர்களின் முக்கிய வேலை.

''பேரும் நல்லாத்தான்
போடுவாராம்
பெறட்டும் நல்லாத்தான்
களைப்பாராம்
''சந்தோஷம்''கள்
வந்துட்டாக்க
சங்கெடுத்துத் தானாது
வாராம்
''வேலை நிறக்கலையே
வேலைகாடாய்
தோணலையே
காடும் நிறக்கலையே —
இந்த
கணக்கப்பிள்ளையே
இல்லாமே''

சில நேரங்களில் இவர்கள் வேலைபார்ப்ப[illegible] மிகவும் வேடிக்கையாக இருக்கும். மகிழ்ச்சி வந்தால் பேரும் ஒழுங்காகப் போடுவார்கள். பெறட்டும் நன்றாகக் களைப்பார்கள். வேடிக்கையாக கதைகதைத்து வேலையும் பார்ப்பார்கள். மலையில் இவர்களின் குரல் ஒலிக்காவிட்டால்—அதிகாரத் தொனி கேட்காவிட்டால் அது வேலைக்காடாகவும் தோன்றுவதில்லை.

## குட்டிக் கதை

# தத்துவ விசாரணை

பரம்பொருளது சிருட்டிப் பெருமையின் தத்துவ விசாரணையில் தன்னைமாய்த்து, அழித்து, நீறாக்கி தூயபிறவியாகி, தூல வேட்கையின் வெறிமயக்கத்தில் இடறும் ஆத்துமாக்களை ஆத்மசோதனைக்குள் இழுத்து, சத்திய வழியிலே நடை பயில 'வா, வா' என அழைக்கும் தவக்கோலம் பூண்ட ஞான வேட்கையர்.

அந்த ஞான வேட்கையரின் தவக்கோலத்தை மெய்ப்பிக்க வல்ல ஊத்தைச் சரீரத்தை மூடி மறைக்கும் வெண்துகிலங்கியின் மதாளிப்பு; முறுக்கி விட்டாற்போல நெளிந்து அசைந்தாடும் ஜடாமுடி; ஞானம் பொலியும் அகன்ற நூலின்கீழ் அரை மயக்க நிலையில் தீட்சண்யமான கூரிய நோக்குடைய அகன்ற பெரிய விழிகள்; மார்பகத்திலே விளைந்து படர்ந்தாற்போல காற்றின் தழுவலில் விரியும் செறிந்த தாடி; பேச்சிலே மனதை ஈர்க்க வல்ல காம்பீரியம்; மோன வெளிப்பாட்டில் மெய்மையை உணரும்போது, அதரத்தின் விளிம்பிலே தெளிந்து ஓடும் முறுவலின் மூப்பு.

அத்துறவறப் பொலிவின் ஆகர்ஷண சக்தியில் இலயித்தது மக்கள் கூட்டம். திரள்திரளாக ஆசிரமமேகி தீட்சைபெற்று, ஆன்ம விடுதலையடைந்த நிறைவோடு சென்று கொண்டிருந்தது.

அவர் என்றும் தன்னை ஞானி என்று பெருமைப்பட்டுக்கொண்டதில்லை. ஏகஇறைவனே முதல்வன்; வரையறையிட்டு அடக்கிவிட முடியாப் பரிசுத்தன். சூனியத்திலிருந்து முன்மாதிரி எதுவுமின்றி பிரபஞ்சத்தைச் சிருட்டித்த பெருமையினைப் பெற்றுக்கொண்ட அவனுக்கே 'ஞானி' என்னும் சிறப்புப் பெயர் உரித்துடையதால் தன்னை 'ஞான வேட்கையர்' என்றே அழைத்துக் கொள்வார்.

சட உலகத்தின் மாயைத் தீயில் ஆன்மா வீழ்ந்து எரிந்து கருகிவிடாது, சூக்கும உலகத்திலே நித்திய ஜீவியாக நிம்மதி பெற்று வாழ சமயாசாரம், தவம், யோகம், ஞானம் என்பனவற்றின் விடாப்பிடியான பயிற்சியினால் முக்தியடையும் வழிமுறைகள் பற்றிய போதனைப் பூக்களை அவர் சொரியச் சொரிய மக்கள் அதனை அள்ளி, அள்ளிச் சூடிச் செல்லலாயினர்.

ஒரு நாளிரவு, பக்தனொருவன் ஞானவேட்கையரைப் பணிந்து 'இன்றிரவு தனதில்லமேகி அன்னதானம் பெற்று ஆசீர்வதித்தருளல் வேண்டும்' என்று கேட்டுக்கொண்டான்.

பக்தனின் பணிவான வேண்டுதலுக்கிணைந்த ஞானவேட்கையர், தன் சீடனுடன் ஆங்குச் சென்றிருந்தார்.

அன்று அமாவாசை, ஆகாயத்திலே புகையாக மேவிய கார்மேகத்தின் மூடல். கண்ணின் கருமணியைத் தொட்டாலன்றி உணர முடியாக் கருமை செறிந்தமையிருள்.

வழிகாட்ட ஒளியின்றி ஆசிரமமேக இயலாது என விழிப்புற்றார் ஞான வேட்கையர். தன் அன்புச் சீடனை விழித்தார்: ''சிஷ்ய ஆசிரமமேகி ஒளிகொணர்க! இருட்சியின் ஆட்சிக்கோலம் [illegible]றது'' என்று [illegible]

அந்தக் கரியை ஊடுருவிய சீடனின் விழிகளிலே மருட்சி; இருடியின் ஆணையை மீறமுடியாத் தவிப்பு; கருணையின் ஊற்றுக்கண் அடைத்து, சினத்தின் எரிமலை குமுறினால் தன்னை எரித்து நீறாக்கிவிடுமோ என்ற அச்சத்தினால் சரீரத்தின் உதறல், செய்வதறியாது திகைப்புற்று நின்று கொண்டிருந்தான்.

ஞானவேட்கையரின் கடாட்சமுள்ள பார்வை சீடன் மேற்படர்ந்தது. 'சிஷ்ய! தயக்கமேன்?' அன்போடு கூடிய பண்புமொழி அவரின் அதரம் வெடித்து முத்தாகச் சிதறியது.

''குருவே இந்த அந்தகாரத்தை ஊடறுத்து கல்லும், முள்ளும் செறிந்த பாதையிலே யான் யாங்ஙனம் நெறியாய்ச் செல்வேன்? அந்த மார்க்கத்திலே தங்கள் முதற்கண்ணேகி எனக்கு நெறிகாட்டியருளவேண்டும்'' சிரங்கவிழ்ந்துகொண்டே சொன்னான் சீடன்.

'உன்னால் செயலாற்ற முடியாத காரியத்தை பிறனைச் செய்யும்படி ஏன் பணிக்கின்றாய்? எனும் தத்துவத்தை, சூசகமாக என் சிந்தனைக்கு விசாரணையாக்கிவிட்டான், என்று ஞானவெளிப்பாடு பெற்ற ஞானவேட்கையர், படியிறங்கி, பாதந்தேய்த்து நடைபழகி அநுபூதியுடையோனாகிச் செல்ல அவரின் அடி ஏற்றி நடந்தான் சீடன்.

**எம். ஐ. எம். [illegible]**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தோட்டத் தலைவர்களுக்கு கலியப்பெருமாள் சுற்றறிக்கை

இலங்கைத் தொழிலாளர் கழக பொதுச் செயலாளர் திரு. செ. கலியபெருமாள் சகலதோட்டத்தலைவர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கை வருமாறு.—

**கழகப் பிரதிநிதிகளின் (டெலிகேட்ஸ்) ஆண்டுக் கூட்டம்**

நாட்டில் கூட்டம் வைப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டதும் கழகத்தின் பிரதிநிதிகளின் (டெலிகேட்ஸ்) கூட்டத்தை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு வசதியாக ஒவ்வொரு தோட்டத்திலிருந்தும் கழக உறுப்பினர்களில் 50 பேருக்கு ஒருவர் வீதம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து, தெரிவு செய்யப்படுபவர்களின் பெயர்விபரங்களை அவ்வப்பகுதி மாவட்ட அலுவலகங்களுக்கும் 1971 ஆகஸ்ட் மாதம் இறுதிக்குள் அறிவித்தல் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

(10-ம் பக்கம் பார்க்க)



# தீக்குள் விரலை வைத்தால்...!

நமது தொடர்கதை

## அத்தியாயம் (6)

காலைப் பனியில் குளித்து விட்டு நின்ற பூஞ்செடிகள் எல்லாம் உஷைக் கன்னியின் பொன்வர்ணத்தால் மஞ்சள் பூசிக் குளித்த மங்கல மங்கையர்கள் போன்று காட்சியளித்தன. பனி மலர்கள் போன்று சுகந்த மணம் வீசிய முல்லையும், மல்லிகையும், இனி மலர்வதற்கு இடமில்லையென்னும் வகையில் கொத்துக் கொத்தாக மலர்ந்து தூங்கின. காலைப் பனியையும் பொருட்படுத்தாது மலர் கொய்வதில் ஈடுபட்டிருந்தாள் பானுமதி; அவள் மனம் முதல்நாளிரவு வந்து தம்பியாரின் கதையைக் கூறிவிட்டு, தன்னையும் எச்சரிக்கையாக இருக்கும்படி கூறிச் சென்ற ராஜாராமனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது.

ஒரு பெண் எப்படி வேண்டுமானாலும் உலகத்தை ஏமாற்ற முடியுமா? ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே' என்று முதியோர் கூறியதன் பொருள்

> “ஒரு பெண் எப்படி வேண்டுமானாலும் உலகத்தை ஏமாற்றமுடியுமா? ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்று முதியோர் கூறியதன் பொருள் என்ன? ஆண்களில் பெரும் பகுதியினரை ஆட்டிப்படைக்கும் அற்புத சக்திபடைத்தவளா பெண்? பெண்ணுடைய வஞ்சக புத்திக்காகத்தான் இயற்கை, அவள் தவறு செய்தால் அம்பலப்படுத்தும் வழிவகைகளை அவளிடம் ஏற்படுத்தி வைத்துள்ளது போலும்........”

இதுவாயிருக்குமோ? சரி எது, பிழை எது என்பதைக் கூட ஆராயாமல், அவள் கூறிய ஒன்றைக் கொண்டே யாவற்றையும் நம்பி தன் உடன் பிறந்தவளை இவ்வளவு மட்டரகமானவளாக மதிக்கின்றார் அந்த ராஜாராமன்?

பாரதி கூறியதுபோல் அவர் பெண்டாட்டிதாசனோ? அல்லது ஆண்களில் பெரும் பகுதியினரை ஆட்டிப் படைக்கும் அற்புத சக்தி படைத்தவளா பெண்? பெண்ணுடைய வஞ்சக புத்திக்காகத் தான் இயற்கை அவள் தவறு செய்தால் அம்பலப்படுத்தும் வழி வகைகளை அவளிடம் ஏற்படுத்தி வைத்துள்ளது போலும். பானுமதியின் சிந்தனையைக் கலைத்தது ஒரு குரல். திரும்பினாள் பானுமதி.

'ஏனடியம்மா இந்தப் பனியிலே குளித்துவிட்டு வந்து நிக்கிறியே. உடம்புக்கு ஏதும் வந்தால் என்னடியம்மா செய்யிறது?' என்று கேட்டபடி அவளை நெருங்கினாள் அன்னபூரணி.

'அம்மா! என்னைப் பெற்றவள் கூட இப்படித் தான் என்னை அடிக்கடி எச்சரிப்பாள். இது நாளாந்தம் பழக்கப்பட்டுவிட்டதம்மா தவிர, [illegible]து இறைவனுக்கு நான் செய்யும் நாளாந்த தொண்டு அவனுக்குப் பணி செய்து நோய் வந்தால் அவனே பார்ப்பான்' என்று கூறிச் சிரித்தாள் பானு.

'படிச்ச பொண்ணு அழகாகக் கூறுகின்றாய்; அது சரி பானு, ராத்திரி நடந்ததைத் தெரியுமா? நீ கொஞ்சம் எச்சரிக்கையாக இரடியம்மா.'

'அம்மா! உங்க மூத்த பிள்ளை இங்கே வந்து யாவும் கூறினார். என்னால் நம்ப முடியவில்லை.'

'என்னடியம்மா, அவனே ஒத்துக்கொள்ளுகிறான்; நீ நம்பமாட்டேன் என்கிறாயே?'

'அம்மா, கண்ணால் கண்டது, காதால் கேட்டது யாவும் பொய்யாயிருக்கலாம். ஆனால் தீர விசாரித்தறிய வேண்டும்.'

'நீ ஒருத்திதான்டி அவனுக்காகப் பேசுகிறாய்; என் பிள்ளை தானடியம்மா; ஆனால்...'

'அம்மா, நீங்கள் நடந்ததைப் பார்த்தீர்களா?'

'இல்லை'

'உங்கள் மூத்த பிள்ளை?'

'இல்லை'

'அப்போ யார் பார்த்தது?'

'அவள்தான் கூறினாள்'

'உங்கள் பிள்ளை கூறுவதை நீங்கள் நம்பவில்லை. அவள் கூறுவதை மட்டும் நம்புகின்றீர்கள்.'

'அவன் கூறுவதை யாருமே நம்பமாட்டார்கள் அவன் குணம்தான் எல்லோருக்கும் தெரியுமே.'

'அம்மா, அதுதான் தவறு ஒருவன் பொல்லாதவன் என்றால் நடக்கும் தவறுகள் அத்தனையும் அவன் மீதுதான் சுமத்தப்பட வேண்டுமா?'

'பானு, நீ ஏன்டி அவனுக்குப் பரிந்து பேசுகின்றாய்?'

'நான் உங்கள் பிள்ளைக்காகப் பரிந்து பேசவில்லையம்மா. உண்மை என்ற ஒன்றுக்காகப் பேசுகின்றேன்: உங்கள் பிள்ளையின் அறையில்தானே இது நடந்தது.'

'ஆமாம்'

'இவள் ஏன் அங்கு போனாள்?'

'இவன் வரச் சொன்னானாம். அவள் போனாள்.'

'அம்மா! நீங்கள் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். மிஸ்டர் ரகு பொல்லாதவர் என்றுதானே எல்லோரும் நினைக்கின்றோம்.'

'ஆமாம்'

'அப்படிப்பட்ட ஒருவருடைய அறைக்கு அந்த வேளையில், அவர் அழைத்தாலும் இவள் எப்படிப் போனாள்? ஏன் போனாள்?'

'அடி ஆத்தே! நான் கூட இதைப்பற்றி யோசிக்கவில்லையடி! நீ பொலிசுக்காரன் கேட்டமாதிரிக் கேட்கிறியே'

'அம்மா, அவசரப்படாமல் யோசித்தால் உண்மை தெரியும்.'

'சரியடியம்மா, நான் வாரேன். நீ வேறு யாரிடமாவது இப்படியெல்லாம் கதைத்துவிடாதே. உன்னை அவள் திட்டித்தீர்த்துவிடுவாள்.' என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

பானு கல்லூரிக்குச் செல்ல வீட்டைப் பூட்டிக்கொண்டு புறப்பட்டாள். வழமையாக அவளுடன் மாலதியும், சிவராமனும் பஸ் ஹோல்டிங் வரை செல்வார்கள். அன்று அவர்கள் கல்லூரிக்குச் செல்லவில்லை.

அவள் மாலதியை அழைத்தபோது, அவள் வந்து தாங்கள் ஸ்கூலுக்குப் போகவில்லையென்று கூறிவிட்டுச்

**யாழ். ஜனர்த்தனன்**

செல்கையில், ரகுராமன் வெளியே புறப்பட்டு வந்து கொண்டிருந்தான். அவன் எதிரே நின்ற பானுமதியைப் பார்த்துவிட்டு 'குட் மோனிங் ரீச்சர்' என்றான்.

'குட்மோனிங் மிஸ்டர் ரகுராமன்' என்று புன்முறுவல் பூத்தாள்; அவள் சிரிப்பது தோட்டத்தில் மல்லிகை மொட்டுக்கள் அடுக்கி நின்ற காட்சியை நினைவுறுத்தியது ரகுராமனுக்கு. எளிய உடையில் அழகாகக் காட்சியளிக்[illegible] [illegible] ஒருவிதக் [illegible] பதை உணர்ந்தான் ரகு. காதலைவோடிய அந்த விழிகள் அவனை விழுங்கிவிடுவது போல் ஆராய்ந்து கொண்டிருந்தன.

'என்ன? கொலிஜ்சுக்குப் புறப்பட்டாச்சா?'

'ஜெஸ், நீங்கள் ஆபீசுக்குத்தானே?'

'இல்லை. இன்று மத்தியானம் கொழும்புக்குப் போறன். இப்போ வேறு வேலையிருக்கு; ரவுனுக்குப் போறன்.'

'ரவுனுக்கா? நல்லது வாருங்கள். எனக்கு வழித்துணையாயிருக்கும்.' என்று பானுமதி கூறிய பொழுது புன்முறுவல் பூத்த ரகுராமன் தலையாட்டியபடி, 'ஆல் ரைட் ரீச்சர் என்றான்:

'ஏன் மிஸ்டர் ரகு, இவ்வளவு நாளும் நான் இங்கே தானே இருந்தேன்? என்னை நேருக்கு நேர் சந்தித்த போதும் எதுவும் பேசாமல் சென்றீர்களே இன்று என்ன இப்படியெல்லாம்.........' என்றாள்.

'இன்று நான் கொழும்புக்குப் போறன். இனித் திரும்ப நாளாகலாம்.'

'நான் கேட்ட கேள்விக்கு நீங்கள் பதிலளிக்கவில்லை மிஸ்டர் ரகு; சமாளிக்கின்றீர்கள்.'

'மன்னிக்கவேண்டும் ரீச்சர். உண்மையைக் கூறுகின்றேன். இவ்வளவு நாளும் இங்கே இருப்பவர்களைப் போன்றுதான் நீங்களுமிருப்பீர்கள் என்று நினைத்தேன்.'

'இன்றுமட்டும் எப்படித் திடீர்மாற்றம்?'

'அதுவா? உலகத்தவர் என்னைப்பற்றி எப்படி வேண்டுமானாலும் நினைக்கலாம்; அதைப்பற்றி என்றுமே நான் கவலைப்படுவதில்லை என்னைப் பிறர் நல்லவன் என்பதால் நான் மகிழ்வதும் இல்லை; ஆனால் என்னைப் பெற்ற தாயே என்னைப்பற்றித் தவறுகள் கூறும்படி சூழ்நிலை உருவாகும்போது தான் என் மனம் வேதனைப் படுகின்றது.'

'உண்மையில் நடந்தது என்னவென்று நீங்கள் கூறலாம்தானே?'

'கூறலாம், ஆனால் என்னைப்பற்றி நல்லபிப்பிராயம் இல்லாதவர்கள் மத்தியில்

(11-ம் பக்கம் பார்க்க)

# பண்பான தமிழ் பெண்ணே!

—அன்புடன்—

சடை இழுத்துச் சரியவிட்டு
சட்டை தன்னை முதுதுயர்த்தி
இடை தெரியத் தொடை தெரிய
இரு கொங்கை கனுந் தெரிய
தொடை காட்டும் 'மினிஷ்கேர்ட்'டை
தொடர்ந்தே அணிந் தணிந்து
நடை நடக்க முடியாமல்
நளிந்து வரும் பெண்ணைப்பார்!

பள்ளிக்குப் போக வென்று
பகட்டான உடை யணிந்து
நள்ளிரவு வரும் வரையும்
'நைட்கிளப்'பில் தான் வந்து
கள்ளக் காதலனோடு
கை கோர்த்துக்கால் சேர்த்து
அள்ளி யள்ளி அணைத்தாடும்
ஆரணங்கு அவளைப் பார்!

கருங் கூந்தல் தனைவுயர்த்தி
கண்ணிரண்டில் மை தீட்டி
பருத்த இதழ் இரண்டின்
பக்க மெலாம் 'லிப்ஸ்' பூசி
கருத்தக் கண்ணாடி யொன்றை
கையொன்றில் தான் பிடித்து
உருமாறிக் கருமாறி
உயர்ந்து வரும் பெண்ணைப்பார்!

(வேறு)

பின்னேரப் பள்ளி எனச் சொல்லிவிட்டு
'பீச்'சுக்கு கூட்டி வந்து காதலனை
கன்னேரம் மட்டிலையும் கட்டி யள்ளி
கழற்றிவிட்டு நீச்சலுடை மாற்றி மாற்றி
எந்நேரம் மட்டிலையும் 'இச்...இச்' என்று
எங்கெங்கே எல்லாமோ முத்த மிட்டு
பின்நேரக் கல்வி சுற்கும் மாணவியாம்
அந்நவளும் தமிழ்பெண்ணே அங்கே பார்!

(வேறு)

உடை கழற்றி உடல் காட்டி
ஊன் இழக்கச் செய்து
தொடை காட்டும் பட மொன்றும்
தொடர் இல்லா 'அடன்ஸ் ஒன்லி'யைப்
படை படையாய் பார்க்க எனப்
படித்த தமிழ் கணவனோடு
நடை நடந்து வளைந்து வரும்
நல்ல தமிழ் பெண்ணைப் பார்!

(வேறு)

மின்மினிப் பூச்சிபோன்று மேலைநாட்டு
மிடுக்கான நாகரீக வாழ்வை நம்பி
கண்மணி போன்ற தமிழ் பண்பை விற்று
கழிவுற்று வாழ்விழக்கும் தமிழர் பெண்ணே...
மண்ணான மேலை நாட்டு நாகரீம்
மழைக்கு வரும் நீர்க்குமிழி போன்றதம்மா
புண்ணான அதன் வழியை விட்டு நீயும்
பொன்னான தமிழ் பண்பை காப்பாற்று தாயே!

வண்ண முகத்தோடு வடிவுள்ள வளை காப்பாய்
சின்ன இடையோடு சிரித்த நற் செவ்வாயாய்
அன்ன நடையோடு அழகுமயில் சாயலதாய்
எண்ண இனிக்கும் இன்பத் தமிழிணங்காய்
அந்நவரும் நந்நவரும் எந்நவரும் எம்மை
என்னே பண்பாடு! என்னே தமிழெனவே!
என்றென்றும் போற்றிடவே! இன்பமது
பெற்றிடவே!
பண்பான தமிழ் பெண்ணே! பலகாலம்
வாழுமம்மா!

# இந்தியாவின் நட்புறவை சீர்குலைக்கும் சக்திகள் இலங்கை அரசில் புகுந்துவிட்டனவா?

எம். கல்யாணசுந்தரம் எம். பி.
(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி)

இலங்கைவாழ் இந்திய வம்சாவழிப் பிரச்சினை தமிழ் நாட்டு மக்களின் கவனத்திற்குரிய பிரச்சினையாகும். நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து சுமார் 10 லட்சத்திற்கதிகமான இலங்கைவாழ் இந்திய வம்சாவழியினரின் குடியுரிமையும், வருங்காலமும் நிச்சயமின்றி திரிசங்கு சொர்க்கத்திலேயே இருந்துவருகிறது.

அவர்கள் எந்த நாட்டுக்கு உடையவர்கள் அவர்கள் வருங்காலத்தில் எந்த நாட்டோடு இணைந்திடல் வேண்டும் என்பதை அவர்களுடைய விருப்பத்திற்கே இடமின்றி இந்தியப் பிரதமரும் இலங்கைப் பிரதமரும்கூடி 1964ல் முடிவு செய்தனர். இந்த முடிவுகளிலிருந்து தான் ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் என்று பெயர். இந்த ஒப்பந்தம் இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப்பதிலாக அந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்குவதற்கு ஆரம்பமாக இந்த ஒப்பந்தம் அமைந்துவிட்டது.

இந்த ஒப்பந்தம் கையெழுத்திட்ட தேதியில் அதாவது 30-10-64ல் மொத்தம் 9 லட்சத்து 75 ஆயிரம் இந்திய வம்சாவழியினர் இலங்கையில் வாழ்வதாகக் கணக்கிடப்பட்டது. இவர்களில் 3 லட்சம் பேருக்கு இலங்கை குடியுரிமை அளிப்பதென்றும் 5 லட்சத்து 25 பேர்களை இந்தியாவுக்கு அழைத்துக்கொள்வதென்றும் மீதமுள்ள 1 லட்சத்து 50 ஆயிரம் பேர்களைப் பொறுத்தவரை பின்னர் முடிவுசெய்வதென்பதும் இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்களாகும்.

### சிக்கலை வளர்க்கும்

இந்த ஒப்பந்தம் எந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் செய்யப்பட்டது என்பது விளங்கவில்லை. ஒப்பந்தத்துக்குரிய ஜனங்களுடைய சம்மதத்திற்கு இடமளிக்காமலே ஆடு மாடு வியாபாரம் போன்று ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்று கூறினால் மிகையாகாது.

சுமார் 10 லட்சத்திற்கு மேற்பட்ட மக்களின் வருங்காலம் பற்றிய பிரச்சினையை இவ்வாறு முடிவுசெய்துள்ளது; இரண்டு நாடுகளின் நலன்களுக்கு ஏற்றது என்று கூறமுடியாது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலே மேலும் சிக்கலை வளர்க்கக்கூடியது இந்த ஒப்பந்தம்.

சமீபத்தில் இலங்கை பாராளுமன்றம் இயற்றியுள்ள சட்டம் இந்தச் சிக்கல் எவ்வளவு ஆழமானது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இந்தப் புதிய திருத்தச்சட்டப்படி இலங்கையில் வாழுகின்ற இந்தியக் குடியுரிமைக்கு மனுச்செய்துள்ளவர்களை இலங்கை அரசு அனுமதித்தால் ஒழிய வேலைக்கு வைத்துக்கொள்வது சிறை தண்டனைக்குரிய குற்றமென்று கூறுகிறது. இரண்டு வருடத்திலிருந்து 5 வருடம் வரை கடும் தண்டனை கொடுக்கக்கூடிய குற்றமாம். தோட்ட முதலாளிகள் யாரும் இந்திய குடியுரிமைக்கு மனுச்செய்துள்ள எவரையும் வேலைக்கு வைத்துக்கொள்ள முடியாது. தோட்டத்தொழிலாளிகள், கடைச்சிப்பந்திகள், போன்றவர்கள்தான் உடனே மூட்டை முடிச்சுகளுடன் இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்ற நோக்கம் கொண்டது இந்தச் சட்டம்.

## சிறிமா-சாத்திரி ஒப்பந்தம் நிலைமையை மேலும் சிக்கலாக்கிவிட்டது!

இலங்கைவாழ் இந்திய வம்சாவழியினர் என்கிற இலக்கணத்துக்கு உரிய மக்கள் பெரும்பாலும் இலங்கை வாழ் தமிழர்களேயாகும். எனவேதான் தமிழ்நாட்டு மக்களின் தனிக் கவனத்திற்குரியது. இந்தப் பிரச்சினை என்று ஆரம்பத்தில் கூறினேன்.

### மனித உரிமைப்பிரச்சினை

1964 ஒப்பந்தத்தில் கூறியுள்ளபடி 5 லட்சத்து 25 ஆயிம் பேர்களை இந்தியாவுக்கு அழைத்துக் கொள்வதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது இலங்கை அரசின் குற்றச்சாட்டாகும்.

இந்திய அரசுக்கும் இது மிகவும் சங்கடமான பிரச்சினை. இந்த இரண்டு அரசுகளும் செய்துகொள்ளும் நடைமுறை முயற்சி இலங்கையிலுள்ள மக்களை அகதிகளாக்கிவிடும். இது மனித உரிமை பற்றிய ஒரு பிரச்சினையாகும். அதுமட்டுமல்ல கடந்த பல நூற்றாண்டுகளாக இலங்கையும் இந்தியாவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த வரலாற்றிலிருந்து தோன்றியுள்ள பிரச்சினையாகும்.

ஒப்பந்தப்படி இவர்களை இந்தியாவிற்கு வாபஸ் பெற்று இந்த ஏழாண்டு காலத்தில் இந்தியாவில் மறுவாழ்வு அளிக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் இந்திய அரசின் அசிரத்தைப் போக்கால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை வைத்துக்கொண்டு இந்திய வம்சாவழி தொழிலாளிகளைப் பழிவாங்கக்கூடாது இலங்கை அரசு.

பிரிட்டிஷ் தோட்ட முதலாளிகள் கங்காணிகளை வைத்து முன் பணம் கொடுத்து ஆசை வார்த்தை காட்டி இந்தியாவில் பிழைக்க வழியின்றி தவித்துக்கொண்டிருந்த ஏழை விவசாய மக்களை தோட்டக் கூலிகளாக அழைத்துச் சென்றனர். அன்றைய இலங்கை அரசும் அங்கீகரித்துத்தான் அழைத்துச் செல்லப்பட்டனர். இதற்கென்று தனியாக இலங்கை அரசின் அலுவலகங்கள் 1952 வரை திருச்சியிலும் மண்டபம் காம்பிலும் இருந்து வந்தன.

### நாடற்றவர்களாக்குவது அநீதியானது

பல நூற்றாண்டுகளாக இலங்கையே தங்களின் புது உறைவிடமாக ஏற்றுக் கொண்டு பழகி வாழ்ந்துவந்தனர். அவர்கள் தங்களுடைய வியர்வையையும், ரத்தத்தையும் சிந்திகாட்டையும் மலையையும் திருத்தி தேயிலைத் தோட்டங்களையும் ரப்பர் தோட்டங்களையும் உருவாக்கிய அந்த மக்கள் இன்று, இருநாடுகளும் சுதந்திரம் பெற்ற பின்பு சொந்த நாடு எது என்று அறியாத ''நாடு அற்றவர்கள்'' (Stateless Persons) என்று அழைக்கப்பட்டுள்ளது வரலாற்றின் விசித்திரமேயாகும்.

இவர்கள் இன்று இந்தியாவிற்குத் திரும்பினாலும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது கடினமானது என்பதால இவ்வாறு கூறுவதாக நினைக்கக்கூடாது. ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இலங்கையையே தங்கள் நாடு போன்று பழகி உழைத்து வந்தவர்களை திடீரென்று நாடற்றவர்களாக ஆக்குவதோ, அல்லது இந்தியாவுக்குக் கட்டாயமாக வெளியேற்றுவதோ எந்த விதத்தில் நீதியாகும்?

இலங்கையின் செல்வாதாரங்களில் சுரண்டிக் கொள்ளையடித்ததற்காக அங்கு சென்றுள்ளவர்களை அவர்கள் இந்தியர்களாயினும் சரி அல்லது பிரிட்டிஷ்காரர்களாக இருந்தாலும் சரி அவர்களைத் தயவுதாட்சண்யமின்றி வெளியேற்றட்டும். அத்தகைய நடவடிக்கைகள் இலங்கையின் மறுமலர்ச்சிக்கு அவசியமானதுமாகும்;

ஆனால், தங்கள் உழைப்பின் மூலம் இலங்கையின் பொருளாதார மறுமர்ச்சிக்கு அஸ்திவாரமிட்ட தொழிலாளர்களை நாடற்றவர்களாக்குவதும், உடனே இந்தியாவுக்கு வெளியேற்ற நிர்ப்பந்தங்கள் கொடுப்பதும் ஸ்ரீமாவோவைப் பிரதமராகக்கொண்ட இலங்கை அரசுக்குப் பெருமையளிக்காது.

### இந்திய அரசின் உதவி

சில மாதங்களுக்கு முன்பு இலங்கையில் வன்முறைச் செயல்கள் மூலம் அராஜகத்தைத் தூண்டிவிட்ட கட்சிகள் மீது ஸ்ரீமாவோ அரசு கடும் நடவடிக்கைகள் எடுக்க இந்திய அரசு தன்னலமற்ற உதவியளித்தது. தமிழக மக்களின் நல்லெண்ணமும் ஆதரவும் ஸ்ரீமாவோ தலைமையில் உள்ள கூட்டணி அரசுக்கு நிறைய இருந்தது;

ஆனால் மக்கள் ஒன்றுபட்டு ஏகாதிபத்தியத்தின் சக்திகளை முறியடிக்க வேண்டிய காலம் இது. இந்திய நாடு ஒரு பெரும் சோதனையில் சிக்கியுள்ளது. தினம் 3 கோடி பேருக்கு அதிகமாகச் செலவு செய்யக்கூடிய அளவு பங்களாதேஷ் அகதிகள் பிரச்சினை ஒரு பெரும் அரசியல் பொருளாதார நெருக்கடியாக நம் தேசத்தின் முன் நிற்கிறது. ஏகாதிபத்திய நாடுகள் இந்த நெருக்கடியான காலத்தில்கூட பங்களாதேஷ் மக்களுக்கோ அல்லது இந்திய நாட்டிற்கோ அனுதாபம் காட்டாதது மட்டுமல்ல, வெந்த புண்ணில் வேல் கொண்டு குத்துவதுபோல மேற்கு பாக்கிஸ்தானின் ராணுவ ஆட்சிக்கு கப்பல் கப்பலாக ஆயுதங்களை அனுப்பிக் கொண்டிருக்கிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

பங்களா தேஷ் அகதிகளுக்கு உதவி செய்வதோடு மட்டுமன்றி அந்தப் போராட்டத்தின் முழு உண்மைகளை உலகுக்கு எடுத்துக் கூறும் பெரும் பொறுப்பும் இந்தியாவுக்கு வந்துள்ளது; இவ்வளவு நெருக்கடிமிகுந்த காலத்தில் நமது நேச நாடான இலங்கை நாட்டற்றவர் பிரச்சினையை முன் வைத்து நிர்ப்பந்தம் கொடுக்கக்கூடிய சட்டத்தை இயற்றியுள்ளது. ஸ்ரீமாவோ ஆட்சியுடன் நல்லெண்ணமும் நட்புறவும் கொண்டுள்ள நமக்கு வேதனையளிக்கிறது;

### வர்த்தக உறவு சுருங்குகிறது

இந்தியாவின் நெருக்கடி இலங்கையின் வாய்ப்பு என அம்மையார் கருதுகிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. அல்லது இந்தியாவின் நட்புறவைச் சீர்குலைக்கக்கூடிய சக்திகள் இலங்கை அரசில் புகுந்திருக்கின்றனவோ என்ற ஐயம் எழுகின்றது.

இந்திய வமிசாவழியினர் பிரச்சினை ஒன்றுமட்டுமல்ல இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலே வர்த்தக உறவு கூட சுருங்கி வருவது வருத்தம் கொடுக்கிறது; வெங்காயம் கருவாடு இன்னும் மற்ற ஏற்றுமதிப் பொருட்கள் அனேகமாக இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளன என்று கூறலாம்;

தமிழ்நாடு இலங்கையோடு நெருங்கிய தொடர்புள்ள இந்தியாவின் பாகமாகும். தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்குமிடையேயுள்ள உறவுதான் இலங்கை இந்திய உறவுக்கு அடிப்படை என்று கூறினால் மிகை இல்லை. வர்த்தக உறவுகூட இந்த அளவுக்குப் பாதிக்கக்கூடியதற்குக் காரணம் என்ன?

இந்திய அரசு இந்த இலங்கை இந்திய உறவு சம்பந்தப்பட்ட மட்டில் செலுத்துகின்ற அக்கறை மிகவும் குறைவு; நமது வெளிநாட்டு தூதரகங்கள் தூங்குகின்றனவா என்று கேட்கத் தோன்றுகின்றது.

தமிழ் நாட்டிலுள்ள முற்போக்கான கட்சிகள் இந்திய அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுக்கவேண்டும். அதே போன்று இலங்கையிலுள்ள முற்போக்கு சக்திகள் இந்தியாவுடன் நட்புறவை வளர்க்கக்கூடிய முறையில் இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினர் பிரச்சினைக்குத் தீர்வு காண முயலவேண்டும். சிங்களர்-தமிழர் இனவெறிக்கு இடமளிக்காமல் நட்புறவுப் பாதையிலேயே தீர்வுகாண வேண்டியது அவசியமாகின்றது. —நன்றி 'ஜனசக்தி'

---

## தோட்டத் தலை...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

### மாவட்டக்குழு தோட்டக்குழுத்தெரிவுகள்

பிரதிநிதிகளின் ஆண்டுக் கூட்டத்திற்கு முன்னர் தோட்டக்குழு, மாவட்டக்குழு தெரிவுகள் நடைபெற வேண்டியது அவசியமாகையால் இவ்விடயம் தோடர்பாக உங்கள் மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் மாவட்டக்குழு தோட்டக்குழு தெரிவு தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி மாவட்ட அலுவலகங்களுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

### தொழிற் தகராறுகளும் பிரச்சினைகளும்

கழக அங்கத்தினர்களின் தொழிற் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் விசயத்தில் அநாவசிய காலதாமதமாவதைத் தவிர்க்கும்படி மாவட்ட அலுவலகப் பொறுப்பாளர்களுக்கு பணிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் எந்த நேரமும் அலுவலகத்திற்குச் சென்று பிரச்சினைகள் பற்றி பிராது செய்துகொள்ளக் கூடியதாக பிரதிநிதிகள் அல்லது உதவியாளர்கள் அலுவலகத்தில் எந்த நேரமும் கடமையில் இருக்கவேண்டுமென சகல அலுவலக ஊழியர்களும் பணிக்கப்பட்டுள்ளார்கள்; உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பிராதுகளைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள் அலுவலகங்களில் ஒப்படைத்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக முடிவுகள் ஏற்படுவதில் காலதாமதம் ஏற்பட்டாலோ அல்லது முடிவுகளின் திருப்தியில்லையெனிலோ அட்டன் தலைமை அலுவலகத்துடன் (1171/8 டிம்புல்ல வீது, அட்டன்) தொடர்பு[illegible] படி ஆலோசனை[illegible] றது.

### பிரஜா உரிமை தொடர்பான நடவடிக்கை

தற்சமயம் உள்ள சூழ்நிலையில் இலங்கை அல்லது இந்தியப்பிரஜா உரிமைக்கு மனுச் செய்துள்ளவர்களுக்கு உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களை அலுவலகத்திற்குச் சென்று உதவிகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளுமாறு அறிவியுங்கள். இவ்விடயம் தொடர்பாக தேவைப்படும் உதவிகளை உடனுக்குடன் மேற்கொள்ளுமாறு சகல அலுவலகங்களுக்கும் அறிவித்தல் செய்யப்பட்டுள்ளது.

எனவே உங்கள் தோட்டத்தில் இலங்கை அல்லது இந்தியப் பிரஜா உரிமைகோரி மனுச் செய்துள்ளவர்களுக்கு தேவையான உதவிகளை இலவசமாகப் பெற்றுக்கொள்வதற்கு உங்கள் பகுதி மாவட்ட அலுவலகங்களை [illegible] வர்களுக்கு அறிவியுங்கள்.

பொதுச்செயலாளர்.

---

**சுதந்திரன்**

சந்தா விபரம்

1 வருடம் 18 ரூபா
6 மாதம் 9 "

நிர்வாகி,
சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி நலன் வேறு இன நலன் வேறு?.....

## அரசியல் மடல்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி விசுவாசத்தைவிட, தமிழ்சமூகத்தின் மீது விசுவாசம் வேண்டுமாம் நமக்கு-புத்திமதி கூறுகிறது டெயிலிமிரர் ஏடு. டெயிலிமிரர் ஆசிரியரும் மாட்டினும் 'கறுவாக்காட்டு' ''டமிலர்களுக்கு'' விசுவாசமாக இருக்கலாம். ஆனால் தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரை, அது ஈழத்தமிழக மக்களுக்கு என்றென்றும் விசுவாசமாகவே உழைத்து வருகிறது.

தமிழரசுக் கட்சி, தமிழ் மக்களுக்கு விசுவாசமாக உழைத்து வருவதனால்தான், 1956ம் ஆண்டு முதல் ஒவ்வொருதேர்தலிலும் தமிழ் மக்கள் தமிழரசுக்கட்சியிலிருந்து பெரும்பான்மையாக பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து — தமிழரசுக்கட்சிக்கே தமிழினத்துக்காக பேசும் உரிமையை கையளித்துவருகிறார்கள்.

தமிழரசுக்கட்சி தமிழ் மக்களுக்கு விசுவாசமாக உழைத்து வருவதனால்தான்—தமிழ் மக்களின் அரசியல் போராட்டங்கள் எதிலும் ஈடுபடாமல்—எத்தகைய தியாகமும் செய்யாதவராக மாட்டின் இருந்தபோதிலும்—தமிழரசுக்கட்சியின் பெயரைச் சொல்லி கடந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற முடிந்தது. இதை மாட்டினும், அவருக்காக பரிந்துபேசும் டெயிலி மிரரும் உணர்ந்து கொள்ளட்டும்!

அரசியல் நிர்ணயசபையில் நமது தமிழ் மொழியின் உரிமைகள் மறுக்கப்பட்டபின் மானரோசமுள்ள எந்தத் தமிழனுமே அதில் அங்கம்வகித்திட முடியாது. அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறியதன் மூலம் வருங்காலத்திலும் தமிழர்கள் தமது விடுதலைப் போராட்டத்தினை தொடர்ந்து நடத்துவதற்கான பாதையை திறந்து வைத்திருக்கிறோம்.

அரசியல் நிர்ணய சபையில் தொடர்ந்து அங்கம் வகித்திடும் தமிழர்களை, இனத்தை காட்டி கொடுத்திட்ட பச்சைத்துரோகிகள் என்று வரலாறு கூறிடத்தான் போகிறது. அந்தப்பழிச் சொல்லை வேண்டுமானால் மாட்டின் தாங்கிக் கொள்ளட்டும். 'கெடுகிறேன் பந்தயம் பிடி' என்ற நிலையில் மாட்டின் இருக்கிறார் என்றால் நாம் என்ன செய்திட முடியும்.

**ஒரு கட்சியின் செல்வாக்கினால் பெற்ற பா. உ. பதவியை கட்சியிலிருந்து வேறுபட்டு விலகிச்செல்லும் சமயத்தில் உதறித் தள்ளி, மீண்டும் தனது புதிய கொள்கையை முன்வைத்து மக்களின் அனுமதியைக்கேட்பதே ஒரு யோக்கியமான அரசியல்வாதி செய்யவேண்டிய கடமை!**

ஆனால் இதைச்செய்திட தெம்பின்றி—திராணியின்றி—மாட்டினே குதர்க்கம் பேசுகிறார்; தன் ஆதரவாளர்கள் சிலரைக்கொண்டு பேசவைக்கிறார்!

இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தை ஏற்பதா எதிர்ப்பதா என்பதில் தமிழ் காங்கிரசில் கருத்து வேற்றுமை ஏற்பட்ட போது திரு. செல்வநாயகம் அமரர் வன்னிய சிங்கத்துடன் 1949ல் தமிழ் காங்கிரசிலிருந்து வெளியேறினர். ஆனால் அப்போது திரு. செல்வநாயகமும் வன்னியசிங்கமும் தமிழ் காங்கிரஸ் சார்பில் 1947 தேர்தலில் பெற்ற பா. உ. பதவிகளை உதறி எறிந்தார்களா? இல்லையே... என்பதுதான் மாட்டின் சார்பில் இன்று கூறப்படும் காரணமாகும்.

அதற்கும் இதற்கும் உவமை காட்டிடுவது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டிடுவது போன்றதாகும். அன்று மலையகத் தமிழர்களின் ஒரே ஸ்தாபனமாகவிளங்கிய இலங்கை இந்திய காங்கிரசுக்கு தமிழ் காங்கிரஸ் சார்பில் கையெழுத்திட்டுக்கொடுத்த உறுதிமொழிகளை மீறி இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தை ஆதரிக்க தமிழ் காங்கிரஸ் தலைவர் முடிவு செய்தார். ஆனால் அதை எதிர்த்து தமிழ் காங்கிரஸ் கட்சியின் அடிப்படைக்கொள்கையைக் காப்பாற்றும் பொருட்டு தந்தை செல்வாவும் வன்னிய சிங்கமும் பிரஜாவுரிமைச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்து விட்டு காங்கிரசிலிருந்து வெளியேறினர். இருவரையும் தொடர்ந்து இன்னும் ஏராளமானோர் வெளியேறி தமிழரசுக்கட்சியை நிறுவினர். தமிழ் காங்கிரஸ் தனது அடிப்படைக்கொள்கையை மீறியதால் எழுந்த நிலை அது.

ஆனால் மாட்டினின் நிலையும் அன்றைய நிலையும் ஒன்றில்லையே...! இன்று தமிழரசுக் கட்சி தனது அடிப்படைக் கொள்கை எதிலும் மாறுபட்டு போகவில்லை; மாட்டின்தான் கட்சிக் கொள்கையிலிருந்து வேறுபட்டு செல்கிறார்! அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரித்திட மறுத்ததுமட்டுமல்ல—தமிழரசுக் கட்சி என்றுமே ஒப்புக்கொள்ளாத ''ஒத்துழைப்பு'' பல்லவியையும் பாடத் தொடங்கியிருக்கிறார்; எவ்வித நிபந்தனையுமின்றி சிங்கள மக்களுடன் ஒத்துழைத்தே உரிமை பெறவேண்டும் என்று ஓலமிடத்தொடங்கியிருக்கிறார். எனவே தமிழரசுக்கட்சியின் அடிப்படைக் கொள்கையிலிருந்து இன்று பிறழ்ந்துபோகிறார் மாட்டின்.

**எனவே திரு. மாட்டின் அரசியலில் யோக்கியராக இருந்திடின், தமது புதிய ஒத்துழைப்புக் கொள்கையை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டு மக்களின் சம்மதத்தைபெறதைரியமிருந்தால் முன் வரட்டும்!**

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

---

## தீக்குள் விரலை வைத்தால்..............

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் கூறும் உண்மைகள் கூடப் பொய்யாகத்தான் போய்விடும். அதன் காரணமாக நான் எதுவுமே சொல்வதில்லை. ஆனால் இன்றுதான் உண்மைக்காகப் போராடக்கூடிய ஒரு பெண் தெய்வத்தைக் கண்டேன்.'

'மிஸ்டர் ரகு, நீங்கள் கூறுவதைக் கேட்கவே சங்கடமாகத்தானிருக்கிறது; யாரை நீங்கள் சந்தித்தீர்கள்?'

'பாரதி பாடிய ஒரு புதுமைப் பெண்ணை, படித்த பெண்ணை, படித்தவர்கள்—பட்டம் பெற்றவர்கள் எல்லாம் அறிவாளிகளல்ல ரீச்சர்.'

'நீங்கள் பட்டம் பெறவில்லை என்பதற்காக அப்படிக் கூறுவதாய்த்தான் மற்றவர்கள் நினைப்பார்கள்.'

'ஆனால் நீங்கள் அப்படி நினைக்கமாட்டீர்கள். ஏனென்றால் உங்களிடம்...'

'சொல்லுங்கள் மிஸ்டர் ரகு'

'சொல்லத்தான் நினைக்கிறேன். முடியவில்லை ரீச்சர். என் வாழ்க்கையில் நான் முதன் முறையாக ஒரு புதுமைப் பெண்ணைச் சந்தித்தேன். என் அசட்டு அம்மாவையே சிந்திக்க வைத்த அந்தப் பெண் சாதாரண பெண்ணாக இருப்பாள் என நான் நினைக்கவில்லை.'

'மிஸ்டர் ரகு, நீங்கள் நினைப்பது தவறு. அந்தப் பெண்கூட உங்களைப்பற்றித் தவறாகத்தான் நினைத்தாள். ஆனால் நேற்று மாலை ஒரு இரகசிய உரையாடலை அவள் கேட்க நேர்ந்ததால் தான் உங்களையும், உங்கள் நிலையையும் நம்ப முடிந்தது.'

''ரீச்சர், நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்?''

''மிஸ்டர் ரகு! உங்களைப் பற்றி நான் தெரிந்து கொண்டபோது நீங்கள் ஒரு உதவாக்கரை மனிதன் என்றுதான் நினைத்தேன். ஆனால் பாரதி உங்கள் குணாதிசயங்களை வர்ணித்த போது, நீங்கள் ஒரு அதிசயப் பிறவியாக இருக்கவேண்டுமெனத் தீர்மானித்தேன். அது உண்மை என்பதை நான் இப்போ முற்றாக உணர்ந்து கொண்டேன்.'' என்று கூறி, கீதாவும் மோகினியும் கதைத்த விஷயத்தைத்தான் தற்செயலாகக் கேட்க நேர்ந்ததாயும் கூறினாள்.

''எவ்வளவு கேவலமான வர்கள். நேற்று மாலை என்னைத்தேடி ஆபீசுக்கு வந்தாள் கீதா. யாரையோ பார்க்க வந்தாய்க் கூறி, வீட்டுக்குத் தானும் வருவதாக என்னோடு வந்தாள் அதைப் பார்த்து நீங்களும் என்னைத் தவறாக நினைத்திருப்பீர்கள்''

உண்மைதான் மிஸ்டர் ரகு ஆனால் நீங்கள் வாலிபனாய் வளர்ந்து விட்ட போதும் குழந்தை மாதிரி நடந்து கொள்ளுகின்றீர்கள். அதனால்தான்—'' என்று அவள் முடிக்கு முன்பே பஸ் வந்து விட்டது. இருவரும் பஸ்ஸில் ஏறினர். பின்னர் கதைப்பதற்குச் சந்தர்ப்பமே கிட்டவில்லை.

அன்று மாலை பானு வீட்டுக்கு வந்தபோது, பாரதி வாசலில் அவளை எதிர் பார்த்து நின்றாள். அவளைப் பார்த்ததும் பானுவின் உள்ளத்தில் பல்வேறு கேள்விகள் ஒருங்கே எழுந்தன.

''என்ன பாரதி, வாசலுக்கு வந்து நிற்கிறாய்?''

''உன்னைத்தான் எதிர் பார்த்து நிற்கிறேன்.''

''விசேடம் ஏதாவது உண்டா?''

''உண்டு என்ன ரகுவும் நீயுமாகச் சோடி போட்டுப் போனதாகக் கீதா சொன்னாள்.''

''என்னதான் சொல்ல மாட்டாள்'' என்று நடந்ததைக் கூறியபொழுது பாரதியால் எதுவுமே பேசமுடியவில்லை.

''நீ இதுபற்றி அம்மாவிடம் கூறினாயா?''

''இல்லை. இந்த விடயம் அம்மாவுக்குத் தெரியாமலிருப்பது நல்லது. ஏனென்றால் குடும்பப் பிரிவினையில் போய் முடிந்து விடாமலிருக்க, நாம் இதனை வெளியிடாதிருப்பதே நல்லம்.''

''பானு, நேற்றிரவு ரகு என்னையே ஏசினான். எனக்கு அப்பேர கூடப்புரியவில்லையே. நான் அவனை எவ்வளவு பொல்லாதவன் என்று நினைத்தேன்.''

''பாரதி, கெட்டவர்கள் என்று நாம் நினைப்பவர்கள் எல்லாம் கெட்டவர்களல்ல என்பதை இனியாவது உணர்ந்து திருந்தினால் அதுவே நல்லது. நீ வீணாய் அலட்டிக் கொள்ளாதே'' என்றாள்.

''ஏன் பானு, நான் ஒன்று கேட்கிறேன் கோபிக்கமாட்டியே.''

''இல்லை, கேள் பாரதி.''

''நீ பேசுவதைப் பார்த்தால் ரகு அண்ணனை நீ...''

''சொல் பாரதி. நான் அவரை விரும்புகிறேனா என்று அறிய விரும்புகிறாய் அப்படித்தானே?''

''ஆமாம்'' என்று தலையாட்டினாள் பாரதி.

''பாரதி'' என்று சிரித்தாள் பானு.

''கோபமா பானு?''

''பைத்தியம் எனக்கென்ன கோபம். இந்தப் பானு எதிலும் இலகுவில் மயங்கிவிட மாட்டாள். உன் அண்ணன் நல்லவனோ, கெட்டவனோ? ஆனால் அதுபற்றி நான் இன்னும் தீர்மானிக்கவில்லை. மிஸ்டர் ரகுராமனிடன் நான் மனதைப் பறிகொடுக்கவில்லை. ஆனால் அவர் பக்கம் உண்மை இருப்பதை என்னால் மறைக்க முடியவில்லை.'' என்று அவள் முடிக்கு முன்பே வெளியே கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

காரிலிருந்து இறங்கிய நாகரீக யுவதி ஒருத்தி மிஸ்டர் ரகுராமன் இருக்கிறாரா? என்றாள் பானுவும் பாரதியும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தபடியே இல்லை என்பதற்குப் பதிலாகத் தலையசைத்தனர்.




---

## தியாகராசாவின் இனத்துரோகப்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் அச்சு மூத்திரை குத்துகிறீர்கள் என்றுதான் கேட்க விளைகின்றோம்.

அரசியல் வாதிகள் சுயநல வாதிகளாகும்போது, அரசியலில் அவர்கள் புகுவதற்கு காரணமாக இருந்த மக்கள் நட்டாற்றில் கைவிடப்படுகின்றார்கள் என்பதை உணராத உங்களுக்கு, அதனை இடித்துரைக்கும் பொறுப்பைத் தந்து எங்கள் வெறுப்புக்குள்ளான விளைவை விரைவில் உணரத்தான் போகிறீர்கள். விளைவின் அறுவடை வெகுதூரத்திலில்லை என்பதையும் உணர்ந்துகொள்ளுங்கள்.

பாராளுமன்ற ஆசனத்தில் அமர்ந்து, உங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்கும், அபிலாசைக்கும் அரசினரோடு அண்டிவாழ்வதை நோக்கமாகக் கொண்டு எமதினத்தை அரசியற் படுகுழியில் விழுத்தி, தலைகுனியச் செய்து தமிழின மொழி உரிமைக்கு அழிவுக்கல் நாட்டிய நச்சுப் பாம்பான கயமைத்தன்மையும் கண்ணியமற்ற செயல்களையும் கண்டிப்பதற்கும் எங்கள் வெறுப்பை வெளிப்படுத்துவதற்கும் கையாளும்வார்த்தைகளின் தரத்தை கண்ணியமென்ற காரணத்திற்காக கட்டுப்படுத்துகிறோம்.

இலங்கை அரசியலில் உலகிற்கு புறநடையான ஒரு மனவியாதியை எங்கள் அரசியல் வாதிகள் பெற்றுள்ளார்கள் என்பதை இங்கே வெட்கத்தோடு கூற விரும்புகிறோம். இலங்கையிற்தான் அரசியல் வாதிகளுக்கு 'தனிப்பட்ட அபிப்பிராயம்' என்ற புற்று நோய் பீடித்துள்ளது; கட்சியின் கோட்பாட்டை மீறும்போது தனிப்பட்ட அபிப்பிராயம் என்ற மேல் மூடிச் சேலைக்குள் புகுவது வெட்கப்படவேண்டிய ஒன்று!

கட்சியின் கட்டளையை மீறுங்கால் தாங்கள் கட்சியின் பெயரால் பெற்ற பாராளுமன்ற உறுப்புரிமையையும் உதறித் தள்ளி—தனிப்பட்ட மதிப்பையும் தகுதியையும், தரத்தையும் நிலைநாட்டும் நோக்கமாக திரும்பவும் தேர்தலில் நிற்பதற்குத் தயாரா? உங்களை ஏன்தான் கேட்கவேண்டும்? நீங்கள் இதற்குக் கடைசி வரைக்கும் சம்மதிக்கமாட்டீர்கள்.

இதன் கீழ் கையொப்பம் இடும் காரை வாசிகளாகிய நாம் எங்கள் மதிப்பையும் கௌரவத்தையும் நிலைநாட்டுவதற்கும் நாங்கள் காரைநகர் மக்கள் என்று என்றென்றும் வெட்கமின்றி, மிடுக்கோடும் மதிப்போடும் தலைநிமிர்ந்து, நிலைதளராது நெஞ்சுறுதியோடு எவரிக் கும் எடுத்தியம்ப வேண்டிய நிலையை நிலைநிறுத்துவதற்காகத் தாங்கள் அரசியல் நிர்ணய சபையின் கூட்டங்களில் பங்கு கொள்ளாமலிருக்க வேண்டுமென்று அன்புக்கட்டளையை பணிவன்பாக விடவிரும்புகிறோம்.

இல்லையெனில், நாம் தங்களை சகல காரியங்களிலும் ஒதுக்கிவைத்து, தீண்டாத நிலையை ஆக்கி உங்களை அழிவின் பேரெல்லையாகிய படுகுழியில் வீழ்த்துவோம், என்ற வைராக்கியத்தோடு கைச்சாத்திடுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பொழுது காட்சியளிக்கின்றது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) இம்பீரியல் (மட்டு நகர்) வின்சர் (யாழ்நகர்)

தென்னக ஜேம்ஸ் பொண்ட் ஜெய்சங்கர்
காதல் கட்டழகி காஞ்சனு
சிரிப்பு நடிகர் நாகேஷ்
— நடித்த —

## பொண்ணு மாப்பிள்ளை

ஜெய்சங்கர் பொலிசாரினுல் தேடப்படுகிருர்
காஞ்சனு தலை மறைவு
நாகேஷ் பொலிசாரினுல் கைது
(படத்தின் முடிவை மற்றவர்களிடம் கூருதீர்கள்)
(பாஸ்கள் யாவும் ரத்து)



## 5வது வெற்றி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) லிடோ (யாழ்நகர்)
வெலிங்டன் (யாழ்நகர்)

நடிகர்திலகம் சிவாஜிகணேசன்
வாணிஸ்ரீ, மனேரமா, முத்துராமன், சோ
— நடித்த —

## நிறைகுடம்

திரைக்கதை வசனம்: சோ, டைரக்ஷன்: வீ. சீனிவாசன்.

## இப்பொழுது காட்சியளிக்கிறது

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
மைலன் (ஜிந்துபிட்டி)



ரவிச்சந்திரன் ஜெயலலிதா அசோகன் — நடித்த —

## மூன்றெழுத்து

(ஈஸ்மென்ட் கலர்)

## 3வது வாரம்

(சில தினங்கள் மட்டும்)

சென்ட்ரல் (மருதானை) 10; 2, 6, மணிக்கு

* ஜெய்சங்கர் * K. R. விஜயா
* நாகேஷ் —நடித்த—

## பட்டணத்தில் பூதம்

(ஈஸ்ட்மென் கலர்)

## விரைவில் எதிர்பாருங்கள்

சுந்தர ராஜன்
சிவ குமார்
சௌகார் ஜானகி
நாகேஷ்



லக்ஷ்மி கள்ளபாட் நடராஜ் T.R. ராமச்சந்திரன்
— நடித்த —

## கஸ்தூரி திலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப் பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1971-ம் வருடம் ஆடி மாதம் 22-ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவை மகேசன்